# செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

| சிலம்பு | திருவள்ளுவர் ஆண்டு ௧௯௯௨, கார்த்திகை | பரல் |
|---|---|---|
| ௩௬ | திசம்பர், 1961 | ௪ |


## பூசை

ஆறறிவு வாய்ந்த மக்கள் ஓரறிவு முதல் ஐயறிவு ஈறாகச் சொல்லப்படும் ஏனைச் சிற்றுயிர்களினும் மிக்காராய்ப் புலப்படுவது வாய்ப்பேச்சு ஒன்றினாலேயேயாம். அப்பேச்சு மக்களால் பயிற்றப்படின் கிளியும் பூவையும் பேசும் வாய்ப்பினை எய்திப் பேசுவதைக் காண்கின்றோம். அவற்றினின்றும் மக்கள் உயர்ந்தவராதற்குக் கல்விகற்றலேயாம். கல்வி எண்ணும் எழுத்தும் என இருவகைப்படும். எல்லாவுயிர்களும் செவிவாயிலாக ஓசையை உணர்கின்றன. மக்கள் மட்டும் செவிவாயிலாகவுணரும் ஓசையோடமையாது அவ்வோசையினை வரிவடிவாக்கி எல்லாக் காலத்தும், எல்லா விடத்தும், எல்லா மாந்தரும் வல்லவாறுணர்ந்துய்யுமாறு நூல் வடிவாக்கிப் பயின்று வருகின்றனர்.

உலகில் இவ்வரிவடிவப் பயிற்சி தோன்றியிராவிட்டால் உலகத்துள்ளார்க்குத் தங்கருத்துக்களை முன்னிலையிலன்றிப் படர்க்கையிலும் நிகழ்காலத்திலன்றி வருங்காலத்திலும் பிறர்க்குணர்த்தும் வாயில் வாய்த்திராது. உலகமும் இத்துணை முன்னேற்றத்தினை எய்தியிராது. உலகமுன்னேற்றத்திற்குப் பெருந்துணையாகவிருப்பது வரிவடிவ எழுத்துக்களேயாம். கட்புலனாகா உருவம் அருவம் எனப்படும். செவியோசை யனைத்தும் அருவநிலையின. அவற்றை வரிவடிவில் கட்புலனாகக் கண்டு வழங்குவது உருவநிலையாகும். இஃது உருவநிலையேயாயினும், ஆண்பால் பெண்பால் என்று கிளந்து கூறப்படும் சிறப்பின்மையால் இஃது அருவுருவம் எனப்படும். உருவம் - பிழம்பு. அருவம் - அல்பிழம்பு. அருவுருவம் - பிழம்பல்பிழம்பு. எழுத்து வடிவில்

அமைந்துள்ள மந்திரங்களனைத்தும் அருவுருவமேயாகும். இதுபோல் விழுமிய முழுமுதலாம் சிவபெருமானின், திருக்கோவில்களிற் காணப்படும் சிவக்குறிகளனைத்தும் அருவுருவத் திருமேனிகளேயாம். இவையே பண்டைத் தமிழ்ச் சான்றோர் திருவருளால் கண்டுணர்ந்து வழிபட்டுவந்த தனிப்பெருஞ் சிறப்பு வாய்ந்த வழிபாட்டுத் திருவுருவமாகும். இவற்றை விளக்கி ஓதுவதே பண்டை நான்மறைகளாகும்.

இத்திருவுருவம் அமையப் பெறாத கோவில்கள் பண்டைத் தமிழ்நாட்டி னியல்பினிலமையாத பிற்காலத்து வந்தேறிய மயல்சேர் அயன்மொழிச்சார்பால் அமைந்தனவாகும். ஆருயிர்களின் அன்பு அறிவு ஆற்றல்களாகிய முப்பண்பு முறையுற நற்பயனெய்த முத்திற வழிபாடுகள் வேண்டப் படுவன அவற்றுள் அன்பின் விளக்கமாக அருவுருவத் திருமேனியும், அறிவின் விளக்கமாக அருவத்திருமேனியும் ஆற்றலின் விளக்கமாக உருவத் திருமேனியும் திருக்கோவில்களில் பண்டைச் செந்தமிழ்ச் செந்நெறிச் சான்றோர்களால் வழிபடப்பட்டு வந்தன. அவ்வுண்மையினை இன்றுந் திருக்கோவில்களில் காணலாம். அம்பலம் அருவநிலையினையும், சிவக்குறி அருவுருவ நிலையினையும் கூத்தப்பெருமான் முதலிய திருவுருவங்கள் உருவநிலையினையும் குறிப்பனவாகும். அம்பல மெனினும் சபை எனினும் ஒன்றே. அவை யென்னுஞ்சொல் சவை என்றாகிப் பின் சபை என மருவிற்று. அம்பலத்தின்கண் எவ்வகைத் திருவுருவமும் நாட்டப் படுவதின்று. இதனை வெட்ட வெளி யெனக் கூறுப. இவ்வுண்மை வரும் தாயுமானச் செல்வர் திருமொழியான் உணரலாம்:

“சைவ சமய மேசமயஞ் சமயா தீதப் பழம்பொருளைக்
கைவந் திடவே மன்றுள்வெளி காட்டு மிந்தக் கருத்தைவிட்டுப்
பொய்வந் துழலுஞ் சமயநெறி புகுத வேண்டா முத்திதருந்
தெய்வ சபையைக் காண்பதற்குச் சேர வாருஞ் செகத்தீரே”
—தாயு. ௩0. காடுங் - உ.

இம் மன்றின்கண் உள்ளதாம் சிவபெருமானை உள்கியுணரும் உணர்வினோர் பள்ளமடை யன்பாய்க் காதன்மீக்கூர்ந்து ஒல்லும் வகை ஒவாது உ தலாகிய நற்றவ வழிபாட்டினை நாளும் நயந்துபுரிவர்.

இதுபோல் அருவுருவ வழிபாடு பேரொளிப் பிழம்பின் சீர்நிறைவழிபாடாகும். இவ்வுண்மை வரும் சேக்கிழாரடிகளின் திருவாய் மொழியானுணரலாம்:

“ காணாத அருவினுக்கும் உருவினுக்குங் காரணமாய்
நீணாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாஞ் சிவலிங்கம்

காணாது நேடியமால் நான்முகனுங் காணநடுச்
சேணுருந் தழற் பிழம்பாய்த் தோன்றியது தெளிந்தாராய்''
—கஉ. சாக்கியநாயனார்—அ

சிவலிங்கந் தழற்பிழம் பென்னும் உண்மை இத்திருப் பாட்டான் நன்குணரப்படும். அங்ஙனமிருந்தும் உண்மை புணரும் மதுகையிலார் சிலர் ஆண்பெண் குறியென அரற்றி அவலமுறுவர். ஆண் பெண் திருவுருவம் தனித்தனி அமைந் துள்ளமை நோக்கியும் இவ்வுண்மையினை எளிதினுணரலாம். மேலும் ஆண் பெண்ணியைந்த ஒரு திருவுருவம் மாதிருக்கும் பாதியன் என்னும் மாண்பமை திருவுருவமாகும். சிவ லிங்கத்தின் திருவுருவம் நிலம், நீர், நெருப்பு என்னும் முத்திற அமைவும் ஒருங்கெய்தியதாகும். பீடம் நிலமாகும். பீடத்தின் மேற் காணப்படும் பள்ளம் நீரின் அடையாளமாகும். மேலோங்கி நிற்குந் தூண் நெருப்பின் அடையாளமாகும். இம்மூன்றும் முறையே படைத்தல், காத்தல், துடைத்தல்களின் குறிப்பு மாகும். திருக்கோவிலமைவினை வருமாறு நினைவு கூர்க:

பொன்னம் பலமருவம் பொற்றூண் அருவுருவம்
பின்னுருவங் கூத்தப் பிரான்.

ஆறறிவு வாய்ந்த மக்கட் பிறப்பொன்றே சிவவழிபாடியற்றிப் பவமொழிந்து சிவன் திருவடிக் கலப்பாம் மாறு விழுப்பேறெய்து தற்கு உரிமை யுள்ளதாகும். வழிபாட்டு முறையினை வகுத்துக் கூறுவது போன்றமைந்துள்ளது திருவள்ளுவ நாயனார் ஓதி யருளிய கடவுள் வாழ்த்து. அது வருமாறு:

திருவருளால் முழுமுதலுண்மையினை யுணர்ந்து, அவன் திருவடியினைத் தொழுது, உழைப்பிலும் உறக்கத்திலும் அவனை மறவா நினைவோடிருந்து, அவன் திருப்புகழினை எப்பொழுதும் ஓதி, அவனையடையுஞ் செந்நெறிக்கண் வழுவாது அழுந்தி நின்று, இவ்வகை நற்றவத்தால் மனக்கவலையினை மாற்றி, அந்தண்மை யொழுக்கத்தால் அவாவற்றுத், தானே வணங்குந் தனிப்பெரும் பூசையால் பேறெய்துதலுண்டாம் பேறு பிறவாப் பெரும்பேறே. பூசை யென்பது அழகு படுத்த லென்பதாகும். அவ்வுண்மை கலம்பூசுதல், வீடுபூசுதல், நிறம்பூசுதல் முதலிய வரலாறு களானுணரலாம். இனிப் பூசுதல் கழுவுதல் என்னும் பொரு ளிலும் கையாளப்படும். இம்முறையான் நோக்கின் மலங்கழுவிச் சிவநலங் கெழுமி அழகாகிய திருவுற்றுவாழ்தற்கு யாண்டும் உறுதுணையாவது பூசை யென்றாகும்.

இப்பூசையும் அன்பால், அறிவால், இன்பால் செய்யப்படுவ தென மூவகையாகும். திருவருட்டுணையால் செந்தமிழ்த்திரு

மாமறை திருமாமுறைகளை ஓதியுளங்கசிந்து ஓதி வழிபடுவது அன்பு வழிபாடாகும். அத்திருமுறைகளுள் ஓதப்படும் போற்றி மந்திரங்கள் புகன்று மலர் தூவிப் பூசித்தல் அறிவு வழிபாடாகும். அத்திருமுறைகளில் காணப்படும் திருவைந்தெழுத்தினை அகமுறக் கணித்தல் இன்ப வழிபாடாகும். இம்மூன்றனுள் நடுநின்றதாகிய மலர்தூவிப் போற்றுதலாகிய அறிவுவழிபாடு முன்னதின் வழியாயும், பின்னதற்கு முதலாகியும் நிற்பதாகும். இச்சிறப்பு நோக்கியே இவ்வழிபாட்டினை அருச்சனை என்னும் பெரும்பெயரால் வழங்கி வருகின்றனர். இவ்வுண்மை 'அருச்சனை பாட்டேயாகும்' என்னும் அருந்தமிழ் மாமறையானுணரலாம். போற்றி மந்திரம் புகன்றே அருச்சனை புரிதல் வேண்டுமென்னும் முறைமையினைத் திருமுறைக்கண் பரக்கக் காணலாம். சிறப்பாகப் 'போற்றித் திருத்தாண்டகம் ஐந்தும்,' திருவாசகத்தின்கண் 'போற்றித் திருவகவல்' ஒன்றும்' 'தரிக்கிலேன் காயவாழ்க்கை' எனத் தொடங்கும் திருப்பதிகம் ஒன்றும் இதற்கெனவே யமைந்து காணப்படுகின்றன. இவற்றின் விளக்கமெல்லாம் 'கழகத்து ஆயிரத்தெட்டாவது வெளியீடாகிய திருமுறைப்பெருந்திரட்' டென்னும் சீரிய நூல் பக்கம் 324 இல் காணலாம்.

இம் முத்திற வழிபாட்டினையும் முறையே 'பத்தராய்ப் பணிதல்,' 'பரமனையே பாடுதல்' 'சித்தத்தைச் சிவன்பாலே வைத்தல்' என்னும் வழிபாட்டின் வாய்மை முறையாகக் கொள்க. 'போற்றிசைத்துப் பூசைசெய்யும்' செந்தமிழோர் வாய்மையினை வருமு திருமாமறையா னுணர்க:

"பொய்யாத வாய்மையாற் பொடிபூசிப்
  போற்றிசைத்துப் பூசைசெய்து
கையினா லெரியோம்பி மறைவளர்க்கும்
  அந்தணர்தங் கருப்பறியலூர்க்
கொய்யுலா மலர்ச்சோலைக் குயில்கூவ
  மயிலாலும் கொகுடிக்கோயில்
ஐயனையென் மனத்தினா னினைந்தபோ
  தவர்நமக் கினியவாறே."

—எ. ௩0-௬.

இதன் பொருள்: நிலைத்த மெய்ம்மையாகிய திருவைந்தெழுத்துப் பெருமந்திரத்தைக் காதலுடன் ஓதிக்கொண்டு திருவெண்ணீற்றைப் பூசியும், பதினாறு இடங்களில் குழைத்து இட்டும், செந்நெறியொழுக்கத்தால் கலியகற்றும் முத்தீ எரியினைப் பேணி, அத்திருவைந்தெழுத்தினை இடையறாது வளர்த்து வரும் அனைத்துயிர்கள் மாட்டும் நீங்காத் தண்ணளி புரிந்துவரும் அந்தணர்கள், போற்றி என்னும் ஈரெழுத்து மந்திரத்தை நாவிடை

நவின்று கையினல் தளிரேனும் மலரேனும் கொண்டு திருவடியிற் றூவிப் பூசையாகிய வழிபாட்டினையாற்றி வாழுந் திருவூர் கருப்பறியலூராகும். அத்திருவூர், கொய்தற்கு வாய்ப்பாகச் சூழ்ந் திருக்கும் மலர்கள் நிறைந்துள்ள அழகிய சோலையின்கண் குயில்கள் பண்ணொடு பாட்டிசைப்பதொத்துக் கூவ, அப்பாட்டி னுக்கேற்றவாறு அரங்கின்கண் நாடகமகளிர் ஆடுவதொத்து மயில்கள் ஆடுந் தன்மை வாய்ந்த தோகைகளை விரித்து ஆடுஞ் சிறப்பினையுடையது; அத்திருவூரின்கண் சிவபெருமான் எழுந் தருளியிருக்கும் திருக்கோயில் கொகுடிக்கோயில். அங்கு விளங் கித் தோன்றும் அழகும் முழுமுதன்மையும் ஒருங்கு வாய்ந்த ஐயனை எளியேனுக்குத் துணையாய்த் திருவருளால் செவ்வியுற வமைந்த மனத்தினல் அடியேன் நினைந்தபோது அவர் நமக்கு நீங்காப் பேரின்பத்தையூட்டி இனிய தன்மையராவர்.

விளக்கம்: 'போற்றி' என்னும் சொல் தனிப்பெருந்தன்மை வாய்ந்த பொருட்செறிவு மிகுந்த அருந்தமிழ்ச் சொல். போற்றி- உயர்வற உயர்ந்த ஒரு பெரு முதல்வன்; தனிப்பெருங் காவல் தந்தாள்வோன். இச்சொல் இகர ஈறு பெற்ற வியங்கோளாய் ஆண்டான் நீண்டருள் காவலைத்தையும் பூண்ட அடிமை வேண் டிக்கொள்ளும் வேண்டுதலாய்க் காத்தருள்க எனப் பொருள் தரும். இனி இகர ஈற்று வினைப்பெயராய்ப் புகழ்தலோடு கூடிய வணக்கம் எனப் பொருள்படும். 'இசைத்து' என்பது எல்லா ரும் இனிதினிணங்கும்படி பல்லாற்ருனும் நல்லவாறு நவின்று என்பதாகும். 'பொய்' - நிலையாதது. பொய்யாத - நிலைத்த. வாய்மை - மெய்ப்பொருள். அது திருவைந்தெழுத்தால் பெறப் படும் அழிவில்லாத முப்பொருள்களுள் சிறந்த முதற்பொரு ளாகிய சிவன்.

திருவெண்ணீறு அணிவார் 'சிவயநம' என்னும் செந் தமிழ்த் திருமாமறை யோதி அணிதல்வேண்டும். இவ்வுண்மை 'திருவாய்ப் பொலியச் சிவாய நமவென்று நீறணிந்தேன்' (௪. ௯௰ - ௯.) என வரும் திருமாமறையானுணரலாம். திரு வெண்ணீற்றிற்குரிய பல்பெயர்களுள் 'பொடி' என்பது சிறந்த தொன்ருகும். அஃதாவது கவர்ச்சி தருவதும் இணங்கவைப்ப தும் என்னும் பெரும்பொருள் தருவதாகும். இவ்வுண்மை வரும் 'சேலுங் கயலுந் திளைக்குங் கண்ணாரிளங் கொங்கையிற் செங்குங்குமம், போலும் பொடியணி மார்பிலங்குமென்று புண்ணியர் போற்றிசைப்ப' (௯. திருப்பல்லாண்டு - அ) என்னும் திருமுறையானுணரலாம்.

'கையினல்' - செந்நெறி யொழுக்கத்தால். கை - ஒழுக்கம். 'சேர்ந்தறியாக் கையானை' த் திருவருளால் சேர்ந்தறிந்து கூப்பிய

திருக்கையால் என்றலுமொன்று. 'எரியோம்புதல்' போற்றிசைத்துச் செய்யும் பூசைக்கு உறுப்பாகும். பூசைக்கு இடம் தூய வுள்ளம். எரியோம்பற்கிடம் கொப்பூழ். உள்குதற்கிடம் புருவ நடு. உள்குதல் - தியானித்தல். எரியோம்புதல் - ஓமஞ் செய்தல். உள்குதலும் ஓமஞ்செய்தலும் உயர்ந்த பூசைக்கு உறுப்புக்களாகும். இஃது உட்பூசை. இதனை ஞான பூசை எனவுங் கூறுப. இதுபோல் புறத்துச் செய்யும் பூசை வெளிப் பூசையாகும். உட்பூசைக்குள்ள ஒண்மலர் எட்டு. அவை 'கொல்லாமை, ஐந்தடக்கல், கொள்பொறுமையோ டிரக்கம், நல்லறிவு, மெய்தவமன் பெட்டு' என்ப. இவ்விருவகை எழிற் பூசைக்குந் திருமாமறை 'சிவயநம' என்னும் செந்தமிழ்த் திருவைந்தெழுத்தேயாம்.

' எரியோம்புதல் ' இது 'கற்றுங் கெரியோம்பிக் கலியை வாராமற் செற்றார்' புரியும் திருச்செயலாகும். இது சிவபெருமானையே விழுமிய முழுமுதலாகக் கொண்டு தொன்றுதொட்டுச் செய்துவரும் சிவவேள்வியாகும். இவ்வேள்வியினை விதந்தெடுத்தோதுவன திருமந்திரம் போன்ற செந்தமிழ்ச் சிவாகமங்களாகும். சிவவேள்வீயெனினும் சைவ வேள்வி யெனினும் ஒன்றே. சைவ வேள்வியென்பது கொலை புலை இல்லாத நிலைநல வேள்வி. இவ்வேள்வி செய்வார் கலியைச் செற்ற கண்ணுதற் பெருங் கடவுளுக்கு மெய்யன்பரார். சைவ உணவென்பதே கொலை புலையில்லா வுணவென்னும் மரபு உலகறிந்த ஒருபெரும் உண்மையாகும். அங்ஙனமிருக்கக் கடவுட்குச் செய்யும் வேள்வி எங்ஙனம் அதற்கு மாறாகக் கொலை புலையுள்ள வேள்வியாக இருத்தல் கூடும்? கலி - துன்பம். கலியைச் செறுதல் - சிற்றுயிர்கட்குந் துன்பம் நேராவண்ணம் குறிக்கொண்டு அதனை நீக்குதல். அயன்மொழி மயலால் ஆரியர் புரியும் பூரிய வேள்வி தக்கனார் போன்ற நற்சார்பற்றார் புரியும் வேள்வி போன்றது

முத்தீ வளர்த்தல் என்னும் முறை தனிப்பெரும் தமிழ்ச் சான்றோரின் துனியில் காட்சி இனிய முறையாகும். முத்தீ வழிபாடு, வாழ்க்கை, மலரடி வாழ்வு என்பனவாகும். இவற்றை வருமாறு நினைவு கூர்க: வழிபாடு வாழ்க்கை மலரடி வாழ்வு, வழிவழிச்செய் முத்தீ வளர்ப்பு. இவ்வுண்மை போற்றித் திருத்தாண்டகத்து வரும் சொற்குறிப்புக்களான் உணரலாம். அவை முறையே "ஊனத்தை நீக்கு முடலே போற்றி யோங்கி யழலாய் நிமிர்ந்தாய் போற்றி" (கூ. ௫௫ - ௪.) "ஊராகி நின்ற வுலகே போற்றி யோங்கி யழலாய் நிமிர்ந்தாய் போற்றி" (கூ. ௨௨ - ௨.) "கானத்தீயாட லுகந்தாய் போற்றி, கயிலை மலையானே போற்றி போற்றி" (கூ. ௯௫ - ௪.) இவற்றுள் வரும் 'ஓங்கியழல், ஓங்கி

யழல், கானத்தீ' என்பன அச்சொற்களாகும். வழக்கமாகக் கூறும் 'ஆகவனீயம், காருகபத்தியம், தெக்கணக்கினி' என்பன இவற்றுளடங்குவனவாகும்.

'மறைவளர்த்தல்': அஞ்செழுத்தினை ஆதி மந்திரமாகக் கொண்டு அவற்றின் விரிவாகிய 'அறம்பொருளின்பம் வீட்டினைக்'[1] கூறும் செந்தமிழ்ப் பண்டைநான்மறைகள். அவை இக்காலத்து அரியனவாயின. அவற்றோடொத்த நால்வர் திருவருளுந்துதலா லருளிச்செய்துள்ள திருமாமறைகள் செந்தமிழ் நான்மறைக ளாகும். இவற்றையோதுவோர் அந்தணர்களெனவும் திருமறை யோர்[2] எனவும் வழங்கப்படுவர்.

இனிப் 'போற்றி' என்னும் பொருவிலா மந்திரம் ஒதி மன மகிழ்ந்து மலர் தூவி வழிபடாதார்க்குச் சிவபெருமான் திருவருள் புரிவானல்லன். இவ்வுண்மை வரும் திருமாமறையானுணரலாம்.

"செழுந்தண் மால்வரை யெடுத்த செருவலி யிராவண னலற
அழுந்த வூன்றிய விரலான் போற்றியென் பார்க்கல்ல தருளான்
கொழுங் கனிசுமந் துந்திக் குளிர்புனல் வளாமல்கு கரைமேல்
அழுந்துஞ் சோலை நெல்வாயி லரத்துறை யடிகடம் மருளே."

—உ. ௬0 - ௮

இத்திருமா மறையின்கண் அரத்துறை அடிகளாகிய சிவ பெருமான் தன் திருவருளை 'அழுந்த வூன்றிய விரலானே! போற்றியென்று' ஓதுவார்க்கு அல்லாமல் ஏனையார்க்கு அருளான் என்பது ஓதப்படுகின்றது. செந்நெறிச் செல்வராம் மெய்யன் பர்கள் இவ்வாய்மையினை உள்ளவாறுணர்ந்து ஏனையார்க்கும் உணர்த்தி வீடுகளிலும், தொழுகை யிடங்களிலும், திருக்கோவில் களிலும், திருவிழாவிலெழுந்தருளிக் கொலுவீற்றிருக்கும் திரு மண்டபங்களிலும், திருமடங்களிலும், திருமணச் சடங்கு முத லிய சடங்குகளிலும் போற்றிப் புகழ்மறை ஓதிப் பூப்பெய்து அருச்சித்துப் பூசை செய்தும் செய்வித்தும் சிவபுண்ணியப் பேறெய்துவார்களாக.

போற்றி மறைபுகன்று பூசைசெய்து வாழ்வெய்தச்
சாற்றுவதே செந்நெறியின் சால்பு.

திருச்சிற்றம்பலம்

---

1. சுழிந்தகங்கை க. ௩௩ - ௬.
2. குருகாவூ. ௧௨. எயர்கோன் - ௧௫௮.

**வி. நடராஜன்,** பி. எஸ்ஸி., (ஆனர்சு) பெங்களூர்-8
22—8—1961

பேரன்புமிக்க ஐயா,

வணக்கம் பல. நலம். தங்களிடம் சென்ற ஞாயிறன்று விழாத் தொடக்கத்தில் ராஜாஜி அவையில் கூறியவாறு அன்று மாலைக் கூட்டத்திற்கு வரமுடியாமற்போய்விட்டது.

ஆதலின் என் மகள் அங்கயற்கண்ணியின் மண நாளன்று மறைத்திரு மறைமலையடிகளாரும், பண்டிதமணி அவர்களும் இயக்குநர்வழி வரைநதனுப்பிய மணவாழ்த்துக்களை இத்துடன் அனுப்பியிருக்கிறேன். அவைகளை நமது "செந்தமிழ்ச் செல்வி"யில் வெளியிடுமாறு வேண்டிக்கொள்வதோடு இரண்டொரு படிகள் எடுத்துக் கொண்டு அவைகளை எமது இல்லத்திற் கொடுத்துவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன். இக்கடிதம் கிடைத்தமைக்குப் பதில் இறுக்கவும்.

தங்கள் அன்புள்ள,

(ஒப்பம்) **வே. நடராஜன்.**

திருவாளர்,

**வ. சுப்பையாபிள்ளை அவர்கள்,**

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,

---

குறிப்பு: உயர்திரு நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்களின் அருமைத் திருமகனார் திரு. வே. நடராசனார் இப்பொழுது பெங்களூரில் பணியாற்றி வருகின்றனர்.

இவர்கள் திருநெல்வேலி சென்றிருந்தபோது ஆவியுலகத் தொடர்பாளராகிய திரு இரா. ந. குற்றாலலிங்கம் பிள்ளையவர்கள் வழி மறைமலையடிகள், நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார், பண்டிதமணி மு. கதிரேசச்செட்டியார் ஆகிய பெருமக்களுடன் உரையாடி உண்மையோர்ந்து உளமகிழ்ந்துள்ளனர். மேற் குறித்த திருமணமும் ஆவியுலகத்துறை அச்சான்றோர்கள் அறிவித்த ஆணைவழியே நிகழ்ந்ததாகும். இவ்வாழ்த்து மடல்களிரண்டும் இவர்கள் விழைந்து வேண்டியவாறே செல்வியில் வெளியிடப்பெறுகின்றன.

**ஆசிரியர்.**

ஓம்

# மன்றல் நாள் மண மடல்

மணமகன் :
சீரேறு செல்வன்
**செயதுங்கன்**

மணமகள் :
சீரேறு செல்வி
**அங்கயற்கண்ணி**

**சான்றோர் சால்பெழு சான்றாண்மைச் செல்வ !**

*திருவருட்பேற்றால், வன்குடித் தோன்றல்; வண்டமிழ் வித்தகன்; நற்றமிழ்ச் செல்வன்; பொன் கொழிக்கும் பொன்னி வள நாட்டு, உள்ளும் புறம்புந் தமிழ்க்குடி மரபின் ஒழுக்கம் வழுக்கா ஒருமைநெறி கொளும் நாட்டார் நற்குடிக் கலங்கரை விளக்கு; சேலுங் கயலுஞ் செழுமணியும் தள்ளும் பொன்னிநீர் நாட்டு, மிக்க செல்வம் மனைகள்தொறும் விளையும் நடுக்காவேரி மூதூர், வடிகொள் வெண்சுதை தீற்றிய மாடம் கெழுமிய நற் புகழ்ப்பதியில், ஒருமை நெறியின் உணர்வுற ஓதிப் பணிந்த இரு முது குரவர் வேண்டிய விருப்பாற் றோன்றிய உத்தமத் தமிழன்; எந்தமிழ் அன்னையின் மெய்ந்நலந் திளைத்த பெற்றியன்; தண்டமிழ் இலக்கிய, காப்பிய எழில் நயம், கசடறத் துய்த்த கலைமகளருளன்; இன்றமிழ் இன்சுவை எங்குடித் தமிழர்கள் துய்த்திட அயரா ஊக்குடன் அரும்பொருட் பண்டமிழ்ப் பனுவல்கள் பலபல தெளிவுரை திருத்திய தக்கோன்; செந்தமிழ்ப் புலமையின் சீரெழு சிற்பி; திருவும் அருளும் அமைவுடை நந் தமிழன்னையின் வன்றொண்டன்; உளமும் புலனும் ஒருவழிச் சென்றுருக, அளவில் இன்பப் பெருங்கூத்தர் பொன்னடி போற்றும் சைவத் திருமகன்; நாநலம் மீக்குடை நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் குலமுதல்; நகை முகச் செல்வன் நட ராசன் நற்குடித் தலைமகள்; அருங்குணத் திருமகள் அருளுடைச் செல்வி; வானூர் மதிவாள்முகமுடைத் திருவெழில்; மாழை யொண் கண்ணி; அங்கயற்கண்ணி அம்மையின் இணைவுடன் சீர் பெருகு சித்திரைத் திங்கள் 16ஆம் இந் நன்னாள், ஆலவாய் அவிர்சடை அண்ணலும், ஏலவார் குழலி, தமிழகச் செல்வி; பாண்டிமாதேவி, ஆலவாய் அரசி, அங்கயற்கண்ணி அன்னை யும் ஆலவாய் அழகனின் அருள்புரிப் பனுவலைத் தெருளார் தமிழுரை திருத்திய தீந்தமிழ்ப்புலவனின் திருக்குடி திருமணச் சிறப்பினைக் கண்டு களித்திட, அண்ணலார் வேண்டிட, அம்மையும் அருளிட, எம்மனோர் இறைஞ்சிட, தம்மனோர் களித்திடச் செம்மைசேர் இல்லறந் தழைத்திட, இல்லறக் காவினில் ஏகின ரென்பது மறக்கொணா மாண்பே !*

**அருளு மலையானின் அருள்சேர் அங்கயற்கண்ணி அம்மையே!**

*நின் இன்புறு மழலைமொழி கேட்டுப் பண்புடைப் பெருமகன் செயதுங்கன் இன்னருள் புரிந்த அங்கயற்கண்ணிபங்கன் அம்பலவாணன் பொற்றாள் நினைந்து மதிவாள்நின் திருமுகங் கண்டு களித்து, விரையார்ந்த மலர்சூடி அமைவிலாக் காதல் பெருகிட நின் மலர்க்கரம் பற்றி மாண்பமை இல்லறச் சோலையேகிட விழையுழி, பிரிவின்றி இயைந்த துவரா நட்பின் இரு தலைப்புள்ளின் ஓர் உயிரனையேம் யாமெனுங் குறிப்பெழு நின் திருமுகக் கற்பொளி, அறிவொளி வீசும் அழகுத் திருமகன் அறிவுடை இதயத்துத் தாங்கி இருவர் கருத்துமொன் றியைந்து, நின் சீரடி சிறப்புற ஏகிய காண்பது அதனினும் பெரிதே!*

**இன்றமிழ் நாட்டுத் தண்டமிழ் நெறியுடை இல்லறச் சுனையின்**
**தெண்ணீர் பருகிடுந் திருவெழு செல்வ! செல்வி!**

*நும் இல்லறச் சிறப்பது ஏதமில் புகழுடன் நந்தமிழ் நாட்டு நற்பண்பது மிளிர்ந்து, நாவலர் புகழ் நாரியர் வெஃக, எம்மனோர் இன்புற, நும் முதுகுரவர் எல்லையில் முதிதை யெய்திட, வள்ளுவர் வாயுறைச் செந்நெறி பற்றி ஏதமில் இல்லறத் தருவினைக் காண்பார் வியந்திட, நுங்கருத்தொருமித்த அன்புநீர் பாய்ச்சிப் பேணி, அப்பெருஞ் சிறப்பால் நிறைசால் விழுப்பொருளென நீள்நிலம் நிறைவுறும் சிறப்புடை மரபின் பொருளும், இன்பமும் இவரெனப் புகழுந் தண்டமிழ்க் கனிகளாம் குழவிகள் பல பல பயந்து பொற்றமிழ் நாட்டுப் பண்பெழு பெருங்குடி மகாராய்ச் சீருஞ்சிறப்பும் இணைந்து பல்கால் புகழுடன் வாழ்ந்திட, அருளாரமுதப் பொழிலாம் அருளளிச் செம்மல் அம்மை அம்பலவாணர் அளவிலாப் புகழுடைச் சேவடி அன்பெனும் மலரிட்டிறைஞ்சுவம்.*

*அன்பன்,*

**மறைமலையடிகள்**

*நெல்வேலிச் செல்வர் அருளுடன் இயக்குநர்வழி*
*வரைந்த தமிழன்,*
*நெல்லை.*

*திருநெல்வேலி*
16—9—1136

---

அரனே அருளுவன்

# வதுவை நன்னாள் வண்ணத் தமிழ் மடல்

மணமகன்: அறிவுடை நம்பி **செயதுங்கன்**

மணமகள்: அழகுடை நங்கை **அங்கயற்கண்ணி**

**திருமணி விளக்கின் அலைவாய்ச் செருமிகு சேயவன் சித்திரமன்ன செயதுங்க !**

*சடையுளே கங்கை வைத்த சங்கரன் திருவருளால் ஞாலம் விளக்கும் ஞாயிற்றின் திரிதரல் ஆடெனப் புகன்றிடுமிச் சிறப்பார் சித்திரைத் திங்கள் 16 ஆம் நிறைநாள், "பூவர் சோலை மயிலாலப் புரிந்து, குயில்கள் இசைபாடக் காமர் மாலை அருகு அசைய நடந்தாய் வாழி காவேரி", யென்ற தண்டமிழ்க் காப்பியப் புகழ்சார் காவிரி யன்னையின் வளஞ் சுரந்திடும் சோழ நன்னாடு சோறுடைத்தெனப் பாவலர் புகழ்ந்தமை நோக்கி, சோணாடு சொற்றமிழ்ச் சொல்வளம் நிறைந்ததெனப் பாரார் புகழ்ந்திட, பலர் புகழ் வண்டமிழ்ச் சோழர் வளநாட்டு மாமூதூர் நற்பதி; நாட்டார் நற்குடிப் புகழினை நாநிலம் அறிந்திடப் புகழுடைப் பொற்பதி நடுக்காவேரி நல்வள நன்மனைப்பிறந்த நற்றமிழ்ச் செல்வன்; சோழ நன்னாட்டு நிறைவளர் தமிழன்; வளவன் றன் வளநாட்டு வண்டமிழ் வல்லோன் !; செந்தமிழ்ச் செல்வியின் சீர்வளந் துய்த்த செம்மல் !, செந்தமிழ்க் காவலன் ! முத்தமிழ் முதலி ! நற்றமிழ் நாவலர் ! வெள்ளேறுடையான் வீரக் கழலடி பணியும் வீரத் தமிழ்மகன் ! நாநலம் இவர்க்கெனப் பண்டிதர் புகழ்ந்திடும், சோர்விலாச் சொற்றமிழ்ச் சொல்நயம் இவர்க்கெனக் கேட்பார் கருத்தெலாந் தம் நாநலம் பிணைத்திடும் நாவலர் ! ந. மு வேங்கடசாமி நாட்டார்*

*இவர்தம் பழுதிலாப் பாங்கில் பண்ணிய சீலமார் பூசனைச் சிறப்பால் மாணிக்கக்கூத்தன் மனமுவந்தருளிய மாண்பெழு மதலை நடராசன், தம் இன்னுயிர்க் கிழத்தி இராசம்மை இணைவுடன் திகழ்ந்த திருமனை இல்லறச் சிறப்பெழு மாண்பினில் மலர்ந்த அழகுடை நங்கை, நங்கையர் திலகம்; நாட்டார் குலக் கற்புத் திருமகள்; மின்னிடைச் செந்துவர்வாய்க் கருங்கண் வெண்நகைப் பண்அமர் மென்மொழி மெல்லியல்; ஆலவாய் அண்ணலார் பங்குறை அங்கயற்கண்ணி அன்னையின் அருள்விழி அமைந்த அன்புத்திருவுரு; செந்தார்ப் பைங்கிளி முன்கையேந்தி முத்தமிழ் முறுவல் உதிர்த்திடுந் தண்டமிழரசியின் தண்ணொளித் திருவெழு செல்வி ! அங்கயற்கண்ணியைத் தொன்றியல் மரபின் மன்றல் அயர, பல்லிதழ் மென்மலர் உண்கண் நல்*

யாழ் நரம்பிசைத்தன்ன இன்தீங்கிளவி நலம் நல்கு நாட்டார் நற்குடிக் கலைமகள் அங்கயற்கண்ணியை மாண்நலந் துய்க்கும் துணையதாக்கிட விரும்பிய இந் நன்னாள் இடப நற்போதினில், தண்டமிழ் மகளிர் "நாணுடை நங்கை மாணலம் பெறுகென" வாழ்த்திட, மங்கல மடந்தையர் மதிமுகங் களித்து "மாண்பெழு இல்லற நல்வளந் துய்த்திட இனிதே யேகுக" வென மணித் தமிழ் மொழியினை முழக்கிட, முழக்கி வாழ்த்திட, மதர்எழில் மாணிழை மகளிர் மங்கல விளக்கினை யேந்திட, முதுவாய்த் திருநுதல் மடந்தையர் குரவை முழக்கிட, விருப்பார் சிறப்பெழு திருமுகப் பொலிவொடு,

நீ, வேல் விழிச்செல்வி! அங்கயற்கண்ணி தன் மதிமுகங் களித்துக் கமழ்மலர் மல்லிகை அலங்கல் சூடிட நின் கழிப்பு அரும் கணக்கு இல் காதற் பொருளெலாம் காட்டிடும் கதிரொளித் திருமுகம் வானுயர் நிலையெனப் புரிந்து, நின் இணையடி இறைஞ்சிய வடிமலர்க் கோதை அங்கயற்கண்ணி நாணி, ஒளிவளர் நின் வெற்றித் திருநுதல் குங்குமச் சாந்திட, கண்ணொடு கண்ணுங் கலந்துறவாடிட, பொன் உயிர்த்து ஒளிரும் பூணுள் பொற்கரந் தாங்கி, மங்கல அமளி இருந்திட, பூவியல் வார்சடை எம்பிரான் தேவியுந் தானுமாய் எளிவந்திறங்கி, எண்ணரிய இன்னருள் புரிந்திட பண்டிதமணி யான் கிளிவந்த மென்மொழியாள கேள்கிளரும் பாதியன் பண்டமிழ்ச் சிறப்பெழு நித்தில நிறைகலனணிக்கழலடி இறைஞ்சிட, நிறைமனை மாண்பெழு கற்புடைத் தமிழகத் தவ்வைமார் "இன்றுபோ லென்றும் பூவும்நல் வெறியு மொத்து நிறைவுடன் வாழ்க", எனப் பண்டமிழ்ப் பண்ணெழுங் கிளவியால் வாழ்த்திட, புலத்துறை முற்றிய நலத்துறை ந. மு. வேங்கடசாமி இல்லங்கள்தோறும் எழுந்தருளிச் செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை, அங்கண் அரசை அடியோங்கட்காரமுதை, மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்துக கைதான் தலைவைத்து, செல்வச் செல்வி சிறப்புடன் வாழ்ந்திட அருளென வேண்டிட, தண்டமிழ் முழுமதி மறைமலை அடிகள் தித்திக்குஞ் செந்தேன் பெருக்கெழு வாதவூரண்ணல் திருமொழி வாசகம் பண்ணுடன் இயைத்துப் பரமனார் வேண்டிட, புலத்துறை முற்றிய பாவலர், பூவையர் பொற்றமிழ்ப் பொன் மலர் சொரிந்திட, நந்தமிழ் நாட்டுச் செல்வர்கள் வாழியரோ! வாழி யென வளத்தமிழ் நாட்டுக் கடிகமழ் மலர்களை வாரி யிறைத்திட, செங்கண்மால் செந்திருவொடு களித்து வாழ்கென அருளிட, தண்டமிழ்ச் செல்வி களித்திட, துடிகொள் வீரமும் தூரியத்திறனும் கடிகமழ்த் தாமரைக் கண்ணும் மிளிர்ந்திடுந் திருமுகச் செயதுங்க! நின் ஆர்த்தபூ அங்கை, ஒண்டமிழ் நாட்டார் மண்டொளி வீசும் மங்கல அணியெனப் போற்றிடும்

மாண்மிகு மங்கல நாணினைத் தேன்ஆர் கடிகமழ் மலர் பிணைத்துக் குங்குமந் தோய்த்து, செந்தமிழ்ப் பைங்கிளி ஆரழகுடைய நங்கை அங்கயற்கண்ணியின் மாந்தளிர் மிடற்றினில் பூட்டிய சிறப்பது செப்பல் ஆம் தன்மைத் தெளிதோ !

**கற்புக் கடம்பூண்டு காதலன் பின்பே யேகிடும் நாட்டார்**
**நாகுலச் செந்திரு ! அங்கயற்கண்ணியே**

எந்தமிழ் நாட்டு ஏற்புடைத் திருமனைத் திருமகளாகி, இல்லறக் காவினில் தகவுறு தலைமகளாகி, செயதுங்கனின் சீர்மனைத் திருவொளி விளக்காய் நன்மனை முதியவர் பொன்னெனப் போற்றிடும் பொருவினில், கொண்டவன கருத்தினைக் குறிப்புடனறிந்து ஆவன வாற்றி, மொழிவழி ஏவல் கேட்டு, நின்மனைச் செல்வன செயதுங்கன் கருததெலாம நின்வயி னாக்கி, அன்பெனும் அருந்தமிழ் அணிகலன் பூண்டு, தொழிற்றுறை உழைத்து உன் இல்லற நன்மனை யேகிடும் உரியனின் அயர்வினை நீக்கி, தகவுற ஆக்கிய இன்சுவை அடிசில் பக்கலில் அமர்ந்து ஊட்டி, நின் இல்லற நன்மணம் யாங்கணும் வீசிட, களிப்பெனுங் கதிரவன் அலர்கதிர் விரித்திட, பெற்றோர் உளமது உவகை பொங்கிட, பெருங்குலத் திருவாய் நற்றிறன் கொண்டு நீ வாழ்தலே சிறப்பென வுரைக்கின்றாம் செந்தமிழ்ப் புலவன்.

**செம்மனச் செல்வ ! செயதுங்க !**

கருத்தால் பொருத்திடா முன்னம் கண்ணால் பொருத்திய காளையே ! விருப்பால் பொருததிடும் வியலது சிறக்கச் சீருடைச் செல்வி! மின்னுவிட்டு இலங்கு பைய பூண் அல்லியுட்பாவை யன்னாள் அங்கயற்கண்ணியும் நீயும் கருத்தா லியைந்தொன்றி, மனம் சுருங்குதலின்றி, அன்பின் மேன்மை திருந்த மன்னி, பொழிந்துகு காதல்பூண்டு, மிக்க நீரராகி, வினைநலம் நுகர்ந்து, புகழுடை வாழ்வாம் இல்லற வாழ்வினில் தருமமும் தகவும் சால்புடை நம்பி நீயெனத் தக்கார் நவின்றிடும் நன்மனை நம்பியாகி நின் தொழிலினுந் தூயனாகி, விழுத்திணைத் தமிழ்க்குல மெய்ந்நின்று, கைப்பிடிக் காரிகை அங்கயற்கண்ணியின் அன்பெழு பிணைப்புடன் வைகலும் வைகலும், உணர்வினால் உணர வொண்ணா ஒருவனும் ஒளிச் சுடரை, ஒன்றிய கருத்துடன் இறைஞ்சி, யாழொடும் கொள்ளா குழலொடுங் கொள்ளா மயக்குறு மழலை இசைத்திடும் மைந்தரும மகளிரும் மாண்புடன் ஈன்று, மாதவச் செல்வரார் இவரென எம்மனோர் களித்திட, தேடும் பொருளினைச் சிறப்புறப் பேணி, ஒல்லும் வகையில் அறப்பணி அளவுடனாக்கி, நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும் நெறிதவறா நேர்மையும் இணைத்துத் திருவுடனளித்துச் சிந்தை

யால் செங்கையால் தீவினை செய்திடாச் சிறப்புடைத் துங்கனாய் வேங்கடசாமி விருப்பமை தமிழ்க்கொடி அங்கயற்கண்ணி தன்னொடு இல்லற எழில்வளம் பண்பெனும் பனிநீர் பெய்து தழைத்திடப் பல்லாண்டு மண்ணக மடந்தை மடிதனில் களித்திட, பஞ்சின் மெல் அடியாள் பாகன் பாதுகம் அல்ல யாவும் அஞ்சலித்து அறியாப் பாரார் விளித்த பண்டிதமணியான், முக்கட் பரமனார் சேணுயர் கழலடி பணிகுவல்.

அன்பன்,
நரைமுற்றிய வெண்தலை வேட்கை
**மு. கதிரேசச் செட்டி**
இயக்குநர்வழி வரைந்தவன்
நெல்லை.

திருநெல்வேலி
1116ஆம் யாண்டு
சித்திரைத் திங்கள்
16ஆம் நாள்

---

## A LETTER FROM MR. THOMPSON

**M. S. H. Thompson**
14. NORMAN AVENUE
TWICKENHAM
MIDDLESEX,
ENGLAND
9 NOVEMBER, 1961.

**The Manager,**
**Saiva Siddhanta Publishing Co.,**
**1/140, Broadway,**
**Madras-1.**

Please accept my most grateful thanks for the sumptuous Commemorative Volume that far exceeded in excellence anything that I had envisaged was possible with the resources at your disposal as well as for the most instructive Bibliography compiled by Dr. Ranganathan, the first of its kind that I have seen. I have been lost in the books for the past couple of weeks or so, feeling at times as though I moved about among the members of the old Tamil Sangam come to life again. I am so glad to have been able to make the acquaintance in this way of the more distinguished of your authors, to whom I conveyed my sincere congratulations. The execution is superb, and it was surely an excellent idea to take us behind the scenes and introduce us to the skilled

workmen engaged in producing such high grade work. I was also, for my part, glad to have a picture of your premises, which brought back many memories. So far as I can tell, your premises are not far from those of the old press set up by the American Misson with P. Hunt as printer-the gentleman who produced Winslow's great Dictionary and Pope's Nannul, which was later reproduced by the Kalarathnakaram Press in Thambu Chetti Street. I will spend many more happy hours turning the pages of the artistic volume and revelling in the interesting letterpress. The plates in colour are of a high order.

I take this opportunity to inform you that in the absence of any more suitable work to replace it, your MANANIKAI has been prescribed by Cambridge for another term of two years for their Certificate Examination.

With every good wish for the support and advancement of your work and my thanks once again for your great kindness in sending me the commemorative volume and its attendant volume.

Believe me,
Yours very sincerely,
(sd.) M. S. H. THOMPSON.

# திரு. தாம்சனின் பாராட்டுரை

[பெயர்ப்பு: மு. ச.]

ஆட்சியாளர்,
*சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்,*
*1/140, பிராட்வே, சென்னை-1.*

தங்களால் வெளியிட முடியும் என யான் எதிர்பார்த்த அளவின் மிகுத்துப் பெரிது பொலியும் வளமார்ந்த வெளியீட்டு விழா மலரையும், டாக்டர். ரங்கநாதன் அவர்களால் ஆக்கப்பட்ட மிக்க செறிவறிவுடைய, யானிதுவரை பார்த்திராத பாராட்டு விழா நூல் பட்டியையும் பெற்றேன்; தங்களுக்கு என் பெரு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். யான் கடந்த இரண்டு மூன்று கிழமைகளாக நூல்களைப்பற்றிய எண்ணங்களில் மூழ்கி

யிருந்தேன்; பழைய சங்கப் புலவர்கள் மீண்டும் உயிர்த்தெழுந்து வர அவர்களுடன் கலந்துறவாடுவது போன்ற உணர்ச்சியை அடிக்கடி பெற்றேன். மிக்க சிறப்புற்ற தங்கள் கழக நூலாசிரியர்களுடன் இவ்வாறு தொடர்பு கொள்ள முடிந்தது பற்றிப் பெரிதும் மகிழ்கிறேன்; அந்நூலாசிரியர்கட்கு என் மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். மலரின் அமைப்பு நுண்ணழகுடைத்து; அத்தகைய உயர்ந்த கட்டட நுண்தொழில் புரிந்துவரும் திறனுடையோரைப் பற்றியும் பிறர்க்கறிவிக்க முயன்றது பெரிதும் சிறந்தவொரு கருத்தே. தங்கள் கழகக் கட்டிட உருவப்படங்களும் எனக்கு மகிழ்ச்சி தருகின்றன. ஏனெனில் அவை பல பழைய நினைவுகளை மீண்டும் நினைவு கூரும்படி செய்கின்றன. எனக்குத் தெரிந்தவரை தங்கள் கழகக் கட்டிடங்கள் அமெரிக்கக் கழகத்தினரால் நிறுவப்பட்ட பழைய அச்சகத்தினின்றும் வெகு தூரத்தில் அமைந்திருக்கவில்லை. அப்பழைய அச்சகத்தில் அச்சிடுவோராக விளங்கிய பி. ஹண்ட் என்பவரே பிற்காலத்தில் தம்புசெட்டித் தெருவில் உள்ள கலாரத்நாகரம் அச்சகம் பதிப்பித்த வின்ஸ்லோவின் பெரிய அகரவரிசையையும்; போப்பையரின் நன்னூலையும் முதலில் அச்சிட்டவராவர். கலை நுட்பம் செறிந்த விழாமலரின் ஏடுகளைத் திருப்பித் திருப்பிப் பார்ப்பதிலும்,விருப்பூட்டும் கட்டுரைகளைப் படித்துக் களிமகிழ் கொள்வதிலும் இன்னும் பல இன்ப மணிநேரங்களைச் செலவிடுவேன். வண்ணத்திலமைந்த படங்கள் மிகச்சிறந்த தரத்தனவாயிருக்கின்றன.

தமிழ் சர்டிபிகேட் தேர்வுக்குக் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம், தாங்கள் வெளியிட்ட மாணவிகை என்ற நூலை, அதனினும் சிறந்த நூல் பிறிதின்மையின், மேலும் இரண்டாண்டுகட்குப் பாடநூலாய்க் கொண்டுள்ளது என்பதையும் இப்போது தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தங்கள்பணி தழைத்துப் பெருகுக என மனங்கனிந்து வாழ்த்துகிறேன். விழாமலரையும், விழாப்பட்டியையும் எனக்கனுப்பி வைத்த பெரிய அன்புடைமைக்காக மீண்டும் என்நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஒப்பம்) **எம். எஸ். எச். தாம்சன்**
இங்கிலாந்து

---

## கலைத்தந்தை

# கருமுத்து தியாகராசச் செட்டியார்

*ஈகையும் புகழும் :*

*"ஒன்ரு உலகத் துயர்ந்த புகழல்லால்*
*பொன்ருது நிற்பதொன் றில்"*

எனத் தமிழ்மறை கூறும். இத்தகைய அழியாத புகழானது கொடை ஒன்றினுலேயே உண்டாகும். "ஈதல் இசைபட வாழ்தல்", "ஈவார்மேல் நிற்கும் புகழ்" என்று பொய்யாமொழியும், "அடுக்கிய மூவுலகும் கேட்குமே சான்ருேர் கொடுத்தார் எனப்படும் சொல்," என்று நாலடியாரும் கூறுவன காண்க.

*சான்ருேர் சென்ற நெறி :*

இவற்றையெல்லாம் தம் ஆழ்ந்த தமிழ்ப் பயிற்சியினுலும் நிறைந்த இறைப் பற்றினுலும் அறிந்ததோடு மட்டுமன்றி வள்ளன்மையை வழிவழிப் பண்பாகவும் பெற்றவர் நம் கலைத் தந்தை கருமுத்து தியாகராசச் செட்டியாரவர்கள். "பிறக்கும் பொழுது கொடுவந்த தில்லை பிறந்து மண்மேல், இறக்கும் பொழுது கொடு போவதில்லை இடை நடுவிற், குறிக்குமிச் செல்வம் சிவன் தந்தது" என்றெண்ணிச் சிறந்த நாட்டுப் பணியாகிய கல்வியறத் திற்குப் பொருளை அளித்து இவர் அழியாப்புகழ் பெற்றிருக்கிருர். நடுவூருள் நச்சு மரம் பழுத்தது போலப் பிறர்க்குப் பயன்படாமல் தம் செல்வத்தை வைத்துக்கொண்டு வாழும் சில செல்வரைக் கண்டு, "காயா மரமும் வறளாங் குளமும்கல் லாவும்என்ன ஈயா மனிதரை ஏன்படைத் தாய்?கச்சி ஏகம்பனே" என்பர் பட்டினத்தடிகள். தம் குல முன்னோர் காட்டிய நன்னெறியை இவர் கடைப் பிடித்துக் கைவண்மையுடையவராய் வாழ்ந்து வருகிருர். "பிறரும், சான்ருேர் சென்ற நெறிஎன, ஆங்குப் பட்டன்று அவன் கைவண்மையே" என்று புறப்பாட்டுக் கூறுவதுபோல், இவர் இயல்பாகவே ஒழுகி வருகிருர்.

*பிறப்பும் இளமையும் :*

இப்பெரியார் இராமநாதபுர மாவட்டத்தில், நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள் என்னும் பெரிய தனவணிகர்கள் வாழும் ஆத்திக்காடு தெக்கூர் என்னும் சிற்றூரைச் சேர்ந்தவர். இவரின் தந்தையார் பெயர் முத்துக்கருப்பன் செட்டியார். தாயார் பெயர் வினைதீர்த்தாள் ஆச்சி. இவர் இவர்களுக்கு 1893 ஆம்

ஆண்டில் அருமந்த மகவாய்ப் பிறந்தார். இவர் தந்தையார் இவரது இளமையிலேயே இறைவனடி சார்ந்துவிட்டார் ஆகையால் இவர் தம் தமையனுருடன் இலங்கையின் தலைநகரும் மாபெருந் துறைமுகமும் ஆகிய கொழும்பு என்னும் பெரு நகரில் தங்கிக் கல்வி பயின்ருர். அவர் இவரைக் கல்வி கேள்விகளாலும், நல்லொழுக்க நற்பண்புகளாலும் சிறந்தவராகச் செய்தார். இவர் தம் இளமையில் கொழும்பு நகரில் உள்ள புகழ்பெற்ற செயிண்டு தாமசு கல்வி நிலையத்தில் சேர்ந்து நன்கு கற்றுச் சிறந்த மாணவராக விளங்கினுர்; ஆண்டுதோறும் தேர்வுகளில் சிறப் பாகத் தேர்ச்சி பெற்று முன்னணியில் நின்ருர். அக்கல்லூரியில் படித்துத் தேர்ந்த பின்னரும், மதுரைக்கு வந்து, அங்குள்ள தூய மரியன்னை உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியராயிருந்த சைமன் பாதிரியார் அவர்களிடம் தனிப்பாடம் படித்துத் தமது ஆங்கில அறிவையும் பொதுஅறிவையும் பெருக்கிக் கொண்டார். அதனுல் இவருக்கு ஆங்கிலத்தில் மிக்க தேர்ச்சியும் உலக அறிவும் உண் டாயின. மேலும் கொழும்பு மாநகரில் தனிப்பெருஞ் சிறப்புடைய சர். பொன்னம்பல அருணுசலத்தாருடன் சேர்ந்து சித்தாந்தச் செல்வர் சித்கைலாச பிள்ளையவர்கள்பால் சித்தாந்தப் பாடமும் பயின்றுள்ளனர்.

**தொழில் :**

இவர் முதலில் கொழும்புநகரில் உள்ள புகழ்பெற்ற "மார்னிங் லீடர்" என்னும் ஆங்கிலச் செய்தித்தாள் அலுவலகத்தில், செய்தித்தாள் பதிப்பிக்கும் தொழிலில் பயிற்சி பெறுவதற்காகச் சேர்ந்தார்; சில ஆண்டுகள் அத்தொழிலைச் செம்மையாகப் பயின்ருர். ஆனுல் அத்தொழிலைத் தொடர்ந்து செய்யாமல், தம் தந்தையார் நடத்தி வந்த அறுவை வாணிகத்தொழிலைத் தம் தமையனுருடன் தொடர்ந்து நடத்தினுர். அத்தொழிலில் இவருக்கு நல்ல ஊதியம் கிடைத்தது. இவர் அவ்வூதியத்தைக் கொண்டு 1924-இல் மதுரையில் "ஸ்ரீ மீனுட்சிநூற்பு ஆலை" என்னும் பெரிய ஆலை ஒன்றைத் தொடங்கினுர். அது இன்று தமிழ் நாட்டிற் பலவிடங்களில் கிளை ஆலைகளைப் பெற்று, மிகப் பெரிய தொழில் நிறுவனமாகச் செயலாற்றி வருகிறது. தென்னுட்டிலேயே ஒரு பெரிய தொழில் முதல்வராக இவர் திகழ்கின்ருர்.

**தொழிலாளர் நலன் :**

பெருந்தொழில் முதல்வராக இருந்துவரும் கலைத் தந்தை இளமையிலேயே, இலங்கையில் இருக்கும்போது தொழிலாளர் நலனில் மிகவும் கருத்துக் கொண்டவராய் இருந்தார். அப் பொழுது இந்தியாவிலிருந்து இலங்கையில் தேயிலைத் தோட்டங் களில் வேலை செய்வதற்காகப் பல்லாயிரவர் சென்றனர். அவர்கள்

அங்குக் "கூலிகள்" என்று அழைக்கப்பட்டு, உரிமையற்றவர்க ளாய்க் "கங்காணி" (கண்காணி) என்னும் தம் தலைவருக்கு அடிமைகள்போல உழைக்க வேண்டும். அவர்களுக்கு அங்கு நிலையாகக் குடியேறுவதற்கோ, சில ஆண்டுகள் சென்ற பின்னர் வேறு தொழில் செய்வதற்கோ உரிமை கிடையாது; "கூலி"யாகத் தொழில் தொடங்கும் போதே, தம் வாழ்க்கைச் செலவிற்காகக் கங்காணியிடம் பொருள் கடன் பெற்று, அக்கடனை என்றும் தீர்க்க முடியாத நிலையில் இருந்தார்கள். ஆகையால் கங்காணி அவர் களைத் தன்னிடமிருந்து என்றும் விடுவிக்க முடியாத நிலை இருந் தது. அவர்கள் தம் தாய் நாட்டிற்குத் திரும்பிச் செல்லவும் தடை இருந்தது. திரும்பச் சென்றாலும் குறிப்பிட்ட காலத்திற்குள் வந்து விடவேண்டும். இவையெல்லாம் போதாவென்று, இங்கிருந்து செல்லும் இந்தியர்களுக்கு, ஆடுமாடுகளுக்குச் சூடுபோடுவது போலச் சூடு போட்டு அடையாளம் இட்டு அனுப்பும் கொடிய வழக்கமும் இருந்தது. இந்த இழி நிலைகளையெல்லாம் போக்கத் தியாகராசச் செட்டியார், இலங்கை வாழ் இந்தியத் தொழிலாளர் களின் உரிமைகளுக்காக அங்கு ஒரு தொழிலாளர் இயக்கத்தைத் தொடங்கினார்; தொழிலாளர் நிலைமையையும் குறைகளையும் நன்கு ஆராய்ந்து அரசாங்கத்திற்கு ஓர் அறிக்கை தந்தார்; அடிக்கடி செய்தித்தாள்களில் அவர்கள் நடத்தப்படும் நிலைமைபற்றி வன்மையாக மறுப்புக் குறிப்புக்கள் எழுதி, அவர்களுடைய உரிமை களுக்காகக் கிளர்ச்சிகள் நடத்தினார். இவற்றின் விளைவாக வெள்ளை அரசாங்கம் "மார்ஷ் பாங்க்ஸ்" என்பவர் தலைமையில் ஒரு குழுவை அமைத்துத் தொழிலாளர் நிலைமையை ஆராயுமாறு பணித்தது. அக்குழு தன் அறிக்கையில், அவர்கள் நிலைமையில் பெருங் குறையொன்றுமில்லை எனக் கூறியது. ஆகவே அக்குழு செய்த தவறுகளையும், அவ்வறிக்கையில் உள்ள முரண்பாடு களையும் இவர் எடுத்துக்காட்டித் தொழிலாளர் நிலை உயருவ தற்காக மேலும் கிளர்ச்சிகள் செய்தார். இவர் அங்கு ஏழாண்டுகள் தொழிலாளர் இயக்கத் தலைவராயிருந்து நடத்திய போராட்டத்தின் விளைவாக, அவர்களுக்குப் பல உரிமைகள் வழங்கப்பட்டன. அவர் களுக்குச் சூடு போடும் வழக்கமும் நிறுத்தப்பட்டது. இத்தகைய இழி நிலைகளைப் போக்கிய செட்டியார் அவர்களுக்கு, இலங்கைத் தோட்டத் தொழிலாளர்கள் என்றும் கடமைப்பட்டவர்களாவர். இன்று அவர்கள் நிலை மிகவும் சீர்திருந்தியிருப்பதற்கும், அவர்கள் பல உரிமைகளையும், வாக்குரிமைகளையும், ஓரளவு செல்வாக்கையும் பெற்று வாழ்வதற்கும் இவரே முதற் காரணராவர்.

**நாட்டுப் பற்று:**

செட்டியாரவர்கள் இங்ஙனம் பொதுநலத் தொண்டில் பேரார்வம் உடையவராக விளங்கினமையால், நம் 'நாட்டில்

அயலாராட்சியை எதிர்த்துக் கோகலே, திலகர், அன்னி பெசண்டு அம்மையார் போன்ற பெருந் தலைவர்கள் நடத்தி வந்த உரிமைக்கிளர்ச்சி இயக்கத்திலும் கலந்துகொண்டார். அக்காலத்தில் நம்மை யாண்டுவந்த ஆங்கில அரசாங்கத்திற்கெதிராகப் பேசுவது என்பதுகூடப் பெருங் குற்றமாக இருந்தது. இருந்த போதிலும் இவர் அரசாங்கத்திற்கு அஞ்சாது, அதன் கொடுமைகளையெல்லாம் எடுத்துக் கூறினர்; அரசாங்கத்தை எதிர்த்துப் போராடி வந்த காங்கிரசுப் பேரவையில் உறுப்பினராகச் சேர்ந்தார். அப்பொழுது இவருக்கு வயது இருபத்து ஒன்றுதான். அவ்விளமையிலேயே நாட்டு விடுதலையில் நாட்டம்கொண்டு இவர் அயராது உழைத்தார்; காங்கிரசு இயக்கத்தில் இவர் கொண்டிருந்த சிறப்பான பற்றினையும், செய்த தொண்டுகளையும் கருதி, இரண்டாண்டுகளில் மாநிலக் காங்கிரசின் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்; பின்னர் அடுத்த ஆண்டே அனைத்திந்தியக் காங்கிரசுக் குழுவின் உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். அக்காலத்தில் காங்கிரசு இயக்கத்தில் இத்துணை விரைவில் மேல்நிலை அடைவது மிகவும் அரிது. கற்றவர்களும், அஞ்சாநெஞ்சமும், தியாக உணர்ச்சியும் மிக்க பொறுக்குமணிகள் போன்ற சில தலைவர்களுமே இருந்த அக்காலக் காங்கிரசில், இத்துணை விரைவில் இவர் முன்னேற்றமடைந்ததற்கு இவருடைய சிறந்த உழைப்பும் ஆராத நாட்டுப் பற்றும் நாட்டு நலப்பணிகளுமே காரணமாகும்.

மகாத்துமா காந்தியடிகள் முதல் முறையாக மதுரைக்கு வந்திருந்தபோது, இவரிடம்கொண்டிருந்தஅன்பினுல் இவருடைய விருந்தினராக மதுரை மேலை மாசி வீதியில் இருந்த ஸ்ரீ மீனுட்சி நூற்பு ஆலை அலுவலகத்தில் தங்கியிருந்தார். அப்போது மதுரையில் தமிழ்நாட்டுக் குடியானவர்கள் அரையில் ஒரே ஆடையுடன் எளிய தோற்றமுடையவர்களாய் இருந்ததை அடிகள் கண்டார். அன்று முதல் அவர்களைப் போலவே அரையில் ஒரே ஆடை அணிந்துகொள்வதென்று உறுதிபூண்டார். தம் சட்டை, முதலிய உடைகளைக களைந்தெறிந்தனர். ஏழை மக்களைப்போல வாழ்ந்து வந்தனர்.

**இறைபணி :**

கருமுத்துக் குடும்பத்தினர் தஞ்சை மாவட்டத்தில் நாகப்பட்டினத்தின் அருகில் உள்ள சிக்கல் என்னும் பாடல்பெற்ற முருகன் (சிங்காரவேலர்) கோயிலுக்கு, ஏறத்தாழ எட்டு நூருயிரம் செலவில் பல திருப்பணிகளைச் செய்துள்ளனர். இன்றும் கருமுத்துக் குடும்பத்தைச் சேர்ந்தவர் யாவரும் இக்கோயில் அறப்பாதுகாப்புக் குழுவில் உறுப்பினராய்ப் பணி புரிகின்றனர்.

தொழில் முதல்வர் :

இன்று நம் செட்டியாரவர்கள் தமிழகத்திலேயே ஒரு சிறந்த தொழில் முதல்வராக விளங்குகிறார். தமிழ்நாடு முழுவதிலும் பல இடங்களில் அவருடைய நூற்புஆலையின் கிளைகள் பரவியுள்ளன. பஞ்சிலிருந்து கொட்டை நீக்குதல், நூல் நூற்றல், நெசவு ஆகிய வேலைகளைச் செய்வதற்குத் தனித்தனி ஆலைகள் உள்ளன. மீனாட்சி நூற்புஆலை நூல்கள், ஆடைகள் என்பவை எங்கும் பெயர்பெற்ற பொருள்களாக விளங்குகின்றன. அவை கடல்கடந்த நாடுகளிலும் மிகவும் விரும்பி வரவழைக்கப்படுகின்றன. தென்னாட்டில் ஆயிரம் மின்சார விசைத்தறிகளுக்குமேல் வைத்து ஆடைகளை நெய்யும் ஓரே நிறுவனம் ஸ்ரீ மீனாட்சி ஆலைத் தொகுதிதான். இவருக்குரிய பல ஆலைகளிலும் ஏறத்தாழ நான்கு நூறாயிரம் நூற்புக் கதிர்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் பல்லாயிர மக்கள் நல்ல ஊதியம் பெற்று வாழ்கிறார்கள்.

தொழிலாளர் குடியிருப்பு :

தம் ஆலைத் தொழிலாளர்களுக்காக மதுரைக்கு அருகில் பசுமலை, பரவை ஆகிய இடங்களில் இவர் அமைத்திருக்கும் குடியிருப்புக்கள் இந்தியாவிலேயே மிகச் சிறந்தவை என்று புகழப்படுகின்றன. தொழிலாளர்கள் வீடுகள் தண்ணிய சூழ்நிலையில் தோட்டங்களுக்கிடையில் பல சிறுசிறு தோட்ட மாளிகைகள்போல விளங்குகின்றன. அவற்றில் குடிநீர், காற்றோட்டம், வெளிச்சம் முதலியவை மிகச் சீரிய முறையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. நல்ல அழகான அகன்ற சாலைகளும், சாலையோர மரங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. தொழிலாளர்களுக்கு மலிவான, நல்ல பொருள்கள் கிடைக்கும்படி செய்வதற்குக் கூட்டுறவுப் பண்டக சாலையும் அங்கேயே நிறுவப்பட்டிருக்கிறது. அவர்களுடைய சிறுவர், சிறுமியர்கள் கல்வி பெறுவதற்கு ஒரு தொடக்கப் பள்ளியும், ஓர் உயர்நிலைப் பள்ளியும் சிறந்த முறையில் இயங்கிவருகின்றன. இக் குடியிருப்புக்களில் மருத்துவ ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. தொழிலாளர்களுக்கு "ஆயுள் பாதுகாப்பு" ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கிறது. இவற்றையெல்லாம் காண்போர், இவர் தம் தொழிலாளர் நலனுக்காக ஆற்றியிருக்கும் சிறந்த பணிகளைப் பாராட்டாமலிரார். இலங்கை இந்தியத் தொழிலாளர் நலனுக்காக அரும்பாடுபட்ட இவர், தம் ஆலைத் தொழிலாளர்களுக்குச் செய்யும் நன்மைகள் வியப்பாகா.

பிற தொழில்கள் :

செட்டியாரவர்கள் ஆலைத் தொழிலில் தென்னாட்டிலேயே ஒரு சிறந்த முதல்வராக இருப்பது மட்டுமன்றி வேறு சில தொழில்

களையும் நடத்தி வருகிறார். "மதுரைப் பாதுகாப்பு நிறுவனம்" (Madura Insurance Company) "மதுரை வங்கி" (Bank of Madura Ltd.) "தமிழ் நாடு" என்னும் நாள் செய்தித்தாள் ஆகியவை அவற்றுள் குறிப்பிடத்தக்கவை. இவரது பல்துறைத் திறமைக்கு, இவற்றை இவர் மிக வெற்றியுடன் நடத்தி வருவதே தக்க சான்றாகும். இவற்றுள் "தமிழ் நாடு" என்னும் நாளிதழ் இவரது மொழிப்பற்றுக்கும், நாட்டுப்பற்றுக்கும், தொழில் திறமைக்கும் ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. இத்தாளில் மிகவும் சிக்கலான இக்காலச் செய்திகள் பலவும், தெள்ளிய தூய தமிழ் நடையில் விளக்கமாக எடுத்துக் கூறப்படுவதும், ஆராயப்படுவதும் குறிப்பிடத்தக்கன. இதன் ஆசிரியராக விளங்குபவர் இவரின் இளைய மகனார் உயர்திரு. மாணிக்கவாசகம் செட்டியார். பி. ஏ. ஆவார்.

**கல்வி நிலையங்கள் :**

கலைத்தந்தை அவர்கள் கல்வியாகிய கலையை மிக்க ஆர்வத்துடனும், மேன்மையுடனும் பேணி வருவதனாலேயே இச் சிறப்புப் பெயருக்கு உரியவராகிறார். இவருடைய அன்பர்களும், இவரது கல்விப் பணியைப் போற்றுபவர்களும் இவரை இங்ஙனம் அன்போடு அழைக்கின்றனர். இவர் ஆற்றிய கல்வியறங்கள் மிகப் பலவாகும். "தியாகேசர் அறப்பாதுகாப்புக்குழு" என்னும் நிறுவனம் இவரின் கல்வி அறச்செயல்களை இனிது நடத்தி வருகின்றது. இக் குழுவில் இவரும், இவருடைய அறிவறிந்த மக்களாகிய உயர்திருவாளர்கள் கருமுத்து. தி. சுந்தரம் செட்டியாரும், கருமுத்து. தி. மாணிக்கவாசகம் செட்டியாரும், மற்றும் பிறரும் பணியாற்றி வருகின்றனர். இக்குழு அரசாங்கத்தினரால் பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுவனமாகும். இதன் வாயிலாக இதுகாறும் ஏறக்குறைய ஒரு கோடி ரூபாய் கல்விக்காகச் செலவிடப்பட்டுள்ளது. இவருடைய சொந்த ஊராகிய ஆத்திக்காடு தெக்கூரில் "விசாலாட்சி கலாசாலை" என்னும் ஓர் உயர்நிலைப் பள்ளியும், மதுரையில் தியாகராசர் கலைக்கல்லூரி, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, பொறியியற் கல்லூரி, நன்முறை உயர்நிலைப் பள்ளி, தியாகராசர் உயர்நிலைப் பள்ளி ஆகியவையும், சேலத்தில் பல்துறைப் பொறியியற் பள்ளியும் நடத்தப்பட்டு வருகின்றன.

**விசாலாட்சி கலாசாலை :**

ஒருவரது நாட்டுப்பற்று முதலில் தோன்ற வேண்டிய இடம் அவரது சொந்த ஊரேயாகும் என்று அறிஞர் கூறுவார்கள். ஒருவர் தம் ஊருக்குப் பணிபுரிந்த பின்னரே நாட்டிற்கும், உலகிற்கும் பணிபுரிவது அறிவுடைமையாகும். உட்சுவரிருக்கப் புறச்சுவர் பூசும் அறிவின்மை சிலரிடம் உண்டு. ஆனால் நம் கலைத்-

தந்தை அங்ஙனமன்றித் தம்மூரிலேயே தமது முதல் பொதுநலப் பணியைத் தொடங்கினர். பல ஆண்டுகளுக்கு முன்பு இவ்வூரையும், கண்டவராயன்பட்டி, நெற்குப்பை முதலிய ஊர்களையும் இணைப்பதற்குச் செம்மையான சாலைகள் இல்லாமலிருந்த குறையைக் கண்டு, இவர் அத்தகைய சாலைகளைப் பெரும்பொருட் செலவில் அமைத்தார். இஃது இப்பகுதியில் வாழும் மக்களுக்கு ஒரு பெரிய அருட்கொடையாகும். பின்னர் இவர் தம்மூரில் ஓர் உயர்நிலைப் பள்ளியைத் தோற்றுவித்தார்.

இவரால் தோற்றுவிக்கப்பட்ட இவ்வுயர்நிலைப் பள்ளியானது அறிவு, ஒழுக்கம் ஆகியவற்றை மாணக்கர்களுக்குப் புகட்டுவதில் ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. அண்மையில் நம் முதலமைச்சர் சவகர்லால் நேரு அவர்கள் இக் கல்விச்சாலைக்கு வருகை தந்து, மாபெருஞ் செலவில் கட்டப்பட்டுள்ள இதன் புதிய கட்டிடத்தைத் திறந்துவைத்து இந்தியா முழுவதற்கும் பெருமை தருமாறு நம் மாநிலத்தில் இயங்கிவரும் பள்ளிச் சீரமைப்புத் திட்டத்தையும் தொடங்கிவைத்து, இவருடைய பணிகளைப் பலவாறு பாராட்டினர். இக்கல்விச்சாலை புதுக்கோட்டைக்குச் செல்லும் பெருஞ்சாலையில் மிகப் பெரிய திறந்த வெளியில், பல அழகான கட்டிடங்கள் விளையாட்டிடங்கள் பொலிய விளங்குகின்றது. இது நம் மாநிலத்திற்கே பெருமையாகும்.

*தியாகராசர் கலைக் கல்லூரி :*

இது 1949 இல் பெருஞ் சிறப்புடன் தொடங்கப்பட்டது. இதனைச் சென்னை மாநில முன்னுள் ஆளுநர் பவநகர் அரசர் பெருமையுடன் திறந்துவைத்து, நம் கலைத் தந்தையின் கல்விப் பணியைப் போற்றிப் புகழ்ந்தார். வையையாற்றிற்கும், மாரியம்மன் தெப்பக்குளம் என்னும் மாபெருங் குளத்திற்கும் இடையில் மிக அழகான தண்ணிய மரங்களடர்ந்த சூழலில் இது அமைக்கப்பட்டிருக்கின்றது. ஒருவரும் அறியாது கிடந்த ஓரிடத்தில் இன்று கண்ணையும், கருத்தையும் கவரத்தக்கவாறு ஓங்கி உயர்ந்த, கலைச் சிறப்பு மிக்க, பல கட்டிடங்கள் காட்சியளித்து நிற்கின்றன. இக் கல்லூரியில் பட்டப் படிப்பில் பொருளாதாரம், கணிதம், விஞ்ஞானம், தமிழ் முதலியவை சிறப்புப் பாடங்களாகப் பயிற்றுவிக்கப்படுகின்றன. பொருளாதாரம், தமிழ், கணிதம், விலங்கு நூல் ஆகியவற்றில் பட்ட மேல்படிப்பு வகுப்புக்கள் நடத்தப் படுகின்றன. இக்கல்லூரி கலைத் தந்தையின் நேர்பார்வையில், வேண்டிய செயல்கள் நன்முறையில் உடனுக்குடன் நிறைவேற்றப் பட்டு, மிகச் சிறந்த கல்லூரியாக, மதுரை மாநகருக்கும், சென்னை மாநிலத்திற்கும் பெருமை தந்து திகழ்கிறது. "அறிவும் அன்புமே சிவம்" என்பது இக்கல்லூரியின் சிறந்த குறிக்கோளாகும்.

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி:

நம் நாட்டில் கல்வி பரவுதற்கு இன்றியமையாத முதற் கருவியாக, முதற்கண் வேண்டுபவர்கள் பயிற்சி பெற்ற ஆசிரியர்களே யாவர். இதனை நன்குணர்ந்த கலைத்தந்தை அவர்கள், தம் கல்வியறத்தின் ஒரு பகுதியாக, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஒன்றையும் நடத்தி வருகிறார். கலைக் கல்லூரியின் தென்மேற்குப் பகுதியில், தெப்பக்குளத்தின் மேற்குப் பக்கமாக இக்கல்லூரி அமைந்துள்ளது. இதனை ஒட்டி, ஆசிரியர்கள் செயல்முறைப் பயிற்சி பெறுவதற்காக அமைந்த நன்முறை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் நூறு மாணவ, மாணவிகள் ஆண்டுதோறும் ஆசிரியர்களாகப் பயிற்சிபெற்று வெளிவந்து, மாநிலத்தின் பல பகுதிகளில் சிறந்த ஆசிரியர்களாகப் பணியாற்றி வருகிறார்கள்.

பொறியியற் கல்லூரி:

மதுரை மாநகரில் இயங்கிவரும் ஓரே பொறியியற் கல்லூரி தியாகராசர் பொறியியற் கல்லூரியேயாகும். வெறும் ஏட்டுக் கல்வியினாலும், ஆராய்ச்சியினாலும் மட்டும் நாடு முன்னேற முடியாதென்பதையும், அணைகள், பாலங்கள், தொழிற்சாலைகள், சாலைகள் முதலிய நாட்டு நலத் திட்டங்களை நிறைவேற்றுவதற்குப் பொறியியல் வல்லுநர்கள் நம் நாட்டிற்குப் பல்லாயிரவர் வேண்டுமென்பதையும் உணர்ந்த நம் கலைத் தந்தையார், முப்பது நூறாயிரம் ரூபாய் செலவில் ஒரு பெரிய பொறியியற் கல்லூரியைத் தொடங்கினார். இது திருப்பரங்குன்றம் என்னும் முருகனது திருத்தலத்தின் அருகில் ஒரு குன்றின் அடிவாரத்தில், இயற்கை எழில் மிக்க இடத்தில் அமைந்துள்ளது. இங்குப் பல உயர்ந்தோங்கிய கட்டிடங்கள் விரைவில் எழுப்பப்பட்டன. மாணவர்கள் தங்கிக் கல்வி பயில்வதற்கு விடுதிகளும் அருகிலேயே கட்டப்பட்டன. ஆண்டுதோறும் நூற்றிருபது மாணவர்கள் இதில் சேர்க்கப்பட்டு, ஐந்தாண்டுப் பொறியியல் பட்டப் படிப்பைப் பயின்று வருகிறார்கள். இதுவும் இன்று மதுரைக்குப் பெருமைதரும் ஒரு சிறந்த கல்லூரியாக விளங்குகிறது. "வினையே உயிர்" என்பது இதன் சீரிய குறிக்கோளாகும்.

சேலத்தில் உள்ள பல்துறைப் பொறியியற் பள்ளி அண்மைக் காலத்தில் தோற்றுவிக்கப்பட்டுப் பல பொறியியல் துறைகளில் மாணவர்களுக்குச் சிறப்பான பயிற்சியளித்து வருகிறது. இதனைக் கலைத்தந்தையாரின் மருமகனாராகிய உயர்திரு. சொக்கலிங்கம் செட்டியாரவர்கள் தம் நேர் பார்வையில் பேணிவருகிறார். சேலம் மாவட்டத்தில் உள்ள மாணவர்களுக்கு இத்தகைய பொறியியற் பள்ளி ஒன்று இல்லாதிருந்த குறையை உணர்ந்த கலைத்தந்தை

அவர்கள், அக்குறையை நீக்குதற்கு இதனைத் தொடங்கி நடத்தி வருவது பெரிதும் போற்றத்தக்கது.

இவ்வாறு இவரது கல்வித் தொண்டினால் தமிழ்நாடு முழுவதும் பயன்பெற்று வருகிறது. இவருடைய குடும்பத்தினர் அனைவரும் இவரின் கல்வியறங்களைக் கண்ணுங்கருத்துமாகப் பேணும் பணியில் முனைந்து நிற்பது, பிற அறநெஞ்சுடையவர்களுக்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

*தமிழ்ப் பற்று :*

கலைத்தந்தை சிறந்த தமிழ்ப் பயிற்சியும், பற்றும் உடையவர். பண்டிதமணி கதிரேசச் செட்டியார், புலவரேறு வரதநஞ்சைய பிள்ளை, நாவலர் சோமசுந்தர பாரதியார் போன்ற பெருந் தமிழ்ப் புலவர்களின் நெருங்கிய தொடர்பினால் இவர் இளமை முதலே தமிழ் இலக்கியச் சுவையை நன்கு துய்த்து இன்புற்று, அம்மொழியையும் இலக்கியங்களையும் பேணுவதில் பற்றுடையவராகத் திகழ்கிறார்; தமது கலைக் கல்லூரியில் தமிழ் மொழியைப் பட்டப் படிப்பிலும், பட்ட மேல்படிப்பிலும், சிறப்புப் பாடமாக வைத்தது மட்டுமன்றிப் பல தமிழறிஞர்களைச் சிறப்பாகப் பேணியும் போற்றியும் வருகிறார்; தமிழ்க்கழகங்களுக்குப் பல நன்கொடைகளையும் அளித்துள்ளார். தம் தமிழ்ப்பற்றின் காரணமாகவே இவர் நல்ல தமிழில் ''தமிழ் நாடு'' என்னும் செய்தித்தாளைப் பெரும் பொருட் செலவையும் பாராது நடத்தி வருகிறார். இவருடைய குடும்பமே தமிழ்ப் பற்றுடைய குடும்பம். இவருடைய அறிவுசான்ற மக்களாகிய திரு. சுந்தரம் செட்டியார், பி. காம்., திரு. மாணிக்கவாசகம் செட்டியார், பி. ஏ., ஆகியவர்களும் இவரைப் போலவே தமிழ்மொழிப்புலமையும், பற்றும், அம்மொழியைப் பேணுவதில் கருத்தும் உடையவர்களாய் விளங்குகின்றார்கள். உயர்திரு. மாணிக்கவாசகம் செட்டியார் பல அரிய தமிழ் நூல்களையும் எழுதியுள்ளார். தமிழ் மொழிக்கு ஊறு உண்டாக்கக்கூடிய எச்செயலையும் எதிர்க்க இவர்கள் வீறுகொண்டெழும் பண்புடையவர்கள்.

*பண்புகள் :*

கலைத்தந்தையவர்கள் மிக்க இறைப்பற்றும், சிறந்த பொதுநல நோக்கமும், தொண்டு மனப்பான்மையும் உடையவர்; அயராத உழைப்பினர்; எவ்வேலைக்கு எவரை அமர்த்தல் வேண்டும் என்ற தகுதியறிந்து அவரை அதில் உய்த்து ஆளும் திறம் வாய்ந்தவர்; தம் நிறுவனங்களில் பணியாற்றும் பலருடைய நன்மதிப்பிற்கும் உரியவர்; அவர்களால் அன்போடும், மதிப்போடும் பாராட்டப் படுபவர்; ''பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு அணி''

என்ற வாய்மொழிப்படி, அவ்விரு அணிகளை உடையவர்; உழைப்பிற்கும், பண்பிற்கும், ஆற்றலுக்கும் குன்றின்மேலிட்ட விளக்குப் போல விளங்குபவர்; யாண்டு பலவாகியும் இளமைத் தோற்றத்துடனும், ஊக்கத்துடனும் உள்ளவர். இன்றும் அவர் அயராத உழைப்பு, நாட்டுப்பணி, பொதுநல நோக்கு முதலியவற்றையே தம் குறிக்கோளாகக் கொண்டு விளங்குகிருர். இவரது வாழ்க்கையின் முன்னேற்றத்திற்குக் காரணம் இப் பண்புகளேயாகும்.

எதிர்காலத் திட்டங்கள் :

இவர் தம் கல்வியறத்தின் இறுதிக் குறிக்கோளாகக் கொண்டிருப்பது ஒன்றுண்டு. அது யாதெனின், மதுரை மாநகரில் ஒரு பல்கலைக் கழகத்தைத் தோற்றுவிக்க வேண்டுமென்பதே. அதற்கு வேண்டிய பெருந்தொகையை இவர் நன்கொடையாக அளிக்கத் துணிவு கொண்டிருக்கிருர். இங்குப் பல்கலைக்கழகம் தோன்றுவதற்குரிய வாய்ப்புகள் பல ஏற்கெனவே அமைந்துள்ளன. சென்னைப் பல்கலைக்கழகத்தின் கிளையாக மதுரை மாநகரம் தேர்ந்தெடுக்கப்பட்டுச் சில ஆண்டுகளாகச் செயலாற்றி வருகிறது. பலரும் மதுரை மாநகரமே புதிய பல்கலைக்கழகம் தோன்றுவதற்கு ஏற்ற இடம் எனக் கூறி, அதை அங்குத் தோற்றுவிக்குமாறு வற்புறுத்தி வருகின்றனர். இதற்காகக் கலைத்தந்தை பல ஆண்டுகளாக முயன்று வருகிருர். இந்நகரத்தில் மேலும் சில புதிய கல்லூரிகளைத் தோற்றுவிக்கவும் இவர் திட்டமிட்டிருக்கிருர். ஒரு பயிர்த் தொழிற் கல்லூரியையும், மகளிர்க்காகத் தனியாக ஓர் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியையும், இசைக் கல்லூரி ஒன்றையும் தோற்றுவித்து, இங்கு ஒரு பல்கலைக்கழகத்தையும் எப்படியும் அமைத்துவிட வேண்டுமென்பது இவரது பெரு விருப்பமாகும். இது நிறைவேற இறைவன் அருள் புரிவானுக! மதுரையில் மருத்துவக் கல்லூரி, பொறியியற் கல்லூரி, ஐந்து கலைக் கல்லூரிகள், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, செந்தமிழ்க் கல்லூரி, வடமொழிக் கல்லூரி முதலிய கல்லூரிகள் இருப்பதாலும், கலைத் தந்தையவர்களுடைய குன்ருத உழைப்பினுலும் ஒரு பல்கலைக்கழகம் விரைவில் தோன்றுமென்று எண்ண இடமுண்டு. இவருடைய கனவு நனவாகுக. கலைத் தந்தை கருமுத்து தியாகராசச் செட்டியாருடைய கல்வியறம் ஓங்குவதாக!

# [1]உண்மை விளக்கம்

[புலவரேறு, திரு. அ. வரதநஞ்சைய பிள்ளை]

## [ஆணவம் கன்மம்]

ஆணவம், மாயை, கன்மம் என்னும் மும்மலங்களுள் மாயை முன்கூறிய வித்தியாதத்துவத்துடன் சேர்க்கப்பட்டதால் அது நீங்க ஈண்டு அறியத்தகுவன ஏனை இரண்டுமேயாம். அவற்றுள்

1. ஆணவம் :—காணும் தன்மையுடைய கண்ணை முற்றும் மறைத்துப் பொருட்களைக் காட்டாது செறியும் இருளைப் போல் ஆன்மாவின் (அறிவிக்க அறியும்) தன்மையையும் பொருள் உணர்ச்சியையும் தெரியவொட்டாது மறைத்துச் செம்பிற் களிம்பும் நெல்லிற் குமியும்போல் அநாதியே பற்றித் தொடரும் தன்மையது.

2. கன்மம்:—உயிர்களின் இன்ப துன்பங்கள் தோன்றுதற்குக் காரணமாய் அவ்வவ்வுயிர்கள் வெறுப்பு விருப்பினாற் செய்யும் செய்கைகளின் காரியமாய் அந்தந்தக் காலங்களில் நியதி தத்துவத்தின் ஏவலின்படிப் பயன்தர நேர்வதாம்.

(இங்ஙனம் உபதேசித்த பரமகுருவின் பாதங்களில் முடிதாழ்த்து வணங்கிச் சீடன்பின்னும் வினவுகின்றான்.)

சீடன்:—உத்தம ஞானவித்தகரே! தேவரீர் அருளியவற்றை அறிந்தேன். இத்தத்துவங்களோடு ஒன்றுபட்டு உடம்பையே தான் எனக்கொண்டிருக்கும் இவ்வான்மாவின் இயல்பை அறிவிக்கவேண்டும்.

ஞானசாரியர்:—பிள்ளாய்! அசித்து, அதாவது அறிவற்றது. சித்து அதாவது அறிவுள்ளது என எல்லாப் பொருட்களும் இருகூறாய்ப் பகுக்கப்பெறும். அவற்றுள், அசித்து ஒன்றையும் அறியாத ஜடம். சித்து, அசித்தை அறியவேண்டா. ஆகவே சித்தையும் அசித்தையும் அறியத்தக்க பொருளொன்று வேண்டப்படும். அதனையே "சதசத்து" என்னும் உயிர் என்றறிக. இவை வேதாகமத் துணிபொருளாம். நாம் உண்ணும் பொருட்கள் தம் சுவையைத் தாமே அறியமாட்டா. உண்போரே அச்சுவைகளை உணர்வார்கள். அதுபோலத் தத்துவங்கள் அனைத்தும் ஜடமாகலின் தம்மை அறியாதனவாம். அவற்றை ஆய்ந்தறியும் அறிவுடைப் பொருள் அவற்றின் வேறாகிய நீ (ஆன்மா) என்றறிக.

---

1. செல்வி, சிலம்பு ௩௫, பரல் ௧௨ பக்கம் ௬௮௮.

சீடன்:—அருட்கடலே! ஆன்மாவின் இயற்கையை உணர்த்திய தங்கள் பெருமையை ஒருவாற்றால் அறிவித்தருளல் வேண்டும்.

(தனக்குபதேசிக்கும் குரு, சிவமே என்னும் உணர்வால் சிவத்தின் இயல்பை வினவுவான் குருவின் பெருமைமேல் வைத்து வினவினான் என்றறிக)

ஞானசாரியர் :—அப்பா! காணுந்தன்மைத்தாகிய கண்ணுக்கு இருளை நீக்கிப் பொருளைக் காட்டும் சூரியனேபோல, ஆன்மாவின் சிற்றறிவையும் முற்றுமறைத்து நிற்கும் ஆணவத்தை நீக்கிச் சிவமாகிய பொருளே மெய்ப்பொருளை அறிவிக்கும். ஆதலால் நீ சத்தும், அசத்துமல்லாத சதசத்துப் பொருளாகின்றமை தெளிக. அன்றியும் அறிகருவிகளாகிய ஐம்புலன்களும் அறிவுமயமாகிய உயிரின் துணைகொண்டன்றி ஒன்றையும் அறியா. அதுபோல் உயிராகிய நீயும் அப்பரம் பொருளின் பெருங்கருணைப் பரமோபகாரத்தினால் அறிகின்ற அறிவைப் பெறுகின்றவனாகின்றாய். அற்ப அறிவினதாகிய ஆன்மாவில் முற்றறிவனாகிய இறைவன் திருவருள் புகாது புகுந்து அறிவிக்கின்றது. இவ்வுபகாரத்தை உள்ளவாறுணர்ந்த மெய்யன்பர்கள் நினையுந்தோறும் கண்ணீர் பெருக்கி மனம் கசிந்துகசிந் துருகிப் பரவச மெய்தி நிற்பர். தினைத்தனைப் பொழுதும் மறவார். இவ்வன்புதானே வீடுபேற்றின் காரணமாக முடிகின்றது.

மேலும் எழுத்துக்கட்கெல்லாம் நாதமாத்திரையாய் இயற்கையாய் எழும் அகர எழுத்தே முதன்மை பெற்றும் ஏனையெழுத்துக்களோடு கலந்தும் நிற்குமாறுபோல் எல்லா வுயிர்கட்கும் உயிராகக் கலந்து நிற்கும் பரம்பொருள் என்றும், அஃதே அகில சராசரங்களையும் இயக்குகின்றதென்றும் ஆகமங்கள் மொழிகின்றன. இவற்றை ஆராய்ந்துணர்வாயாக.

சீடன்:—திருவெண்ணெய் நல்லூர்த் திருப்பதி வாழும் மெய்கண்ட நாதனே! எம்பெருமான் நல்ல தவத்தினர் கண்டு பேரின்பம் அடையும் வண்ணம், நாதமுடிவிலே அஞ்செழுத்துக்களையும் திருமேனியாகக் கொண்டு திருநடனம் செய்யும் வரலாற்றை விளக்கியருளல் வேண்டும்.

ஞானசாரியர் :—மகனே! யகாரமாகிய உயிரினிடத்தே ஐயன் சி,வ,ய,ந,ம என்னும் திருவைந்தெழுத்தாம் திருமேனி கொண்டு உயிர்களின் பிறவிப்பிணி தீர்க்குங் குறிப்பால் ஆநந்தத் திருநடனம் செய்கின்றான். அவ்விவரங்கள் கீழ்வரும் அட்டவணையால் அறியலாம்.

இங்ஙனம் பரவெளியிலே மலைமகளாம் அருட்சத்தி காணுமாறு கருணையேயுருவாம் எம் கண்ணுதற் கடவுள் நிகழ்த்தும் ஐந்தொழிற் கூத்தை உள்ளவாறுணர்ந்தோர் பிறப்பாகிய பெருங் கடலை எளிதிற் கடந்து பேரின்ப வீடுபுகுவர். இவ்வைந் தொழில்களை இன்னும் நுணுக்கமாக நூற்கள் விரிக்கின்றன.

(1) சூக்கும ஐந்தொழில், ஆன்மாக்கள் உடல்பெறு முன்பே, கேவலத்தில் அறிவற்ற குருட்டுக்கிழவிபோன்றிருந்தன. அந் நிலையில் அவற்றை, தநுகரண புவனபோகங்களில் வெளி விடுவதற்கேற்ற பரிபாகம் அளிப்பது சிருட்டி. பரிபாகம் வாராத ஆன்மாக்களை அக்கேவலத்தேயே வைத்தல் திதி. பரிபாகம் உள்ளவற்றைக் கேவலத்தினின்றும் வெளியேற்றல் சங்காரம். கேவலத்திற் கிடப்பவற்றிற்கு இன்று கேவலமென்று தோன்றா திருக்கச் செய்தல் திரோபவம். சகல நிலைக்கண் (உடம்போடு தோன்றும்நிலை) நிறுத்தல் அநுக்கிரகம். இவை உயிர்களமேற் கொண்ட ஆராப்பெருங் கருணையால் இறைவன்பால் நிகழ்வன.

அட்டவணை 6 அட்டவணை 7

| திரு ஐந்தெழுத்துக்கள் | | ஐந்தெழுத்துக்களால் உணர்த்தப்பெறும் பொருட்கள் | எழுத்துக்கால் காட்டப்படும் இறைவன் உறுப்பு | எழுத்துக்களில் அடங்கும் நாடக உறுப்புகள் | ஐந்தொழில்கள் | ஐந்தொழிற் கருவிகள் | கருவிகளால் ஆகும் பயன்கள் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ந | திரோத மலம் | திருவடி | நெருப்பேந்திய திருக்கை | சிருட்டி | துடி | உயிர்களின் மாயையை நீக்கல் | ஐந்தெழுத்துக்கள் நிற்கும் முறை |
| 2 | ம | மலம் | வயிறு | திருவடியில் அமுக்குண்ட முயலகன் | திதி | அமைத்த கரம் | உயிர்களைப் போகத்தில் அழுத்தல் | நகரமுதலாயினும ஓதும் முறை சிகர முதலாகக் கொளளல் வேண்டும் |
| 3 | சி | சிவம் | தோள் | துடி தூக்கிய கரம் | சங்காரம் | நெருப்பு ஏந்திய கை | கன்மத்தை அழித்து இளைப்பாற்றல் | நகர முதலாக ஜெபிக்கின் அருள் நாடாது |
| 4 | வ | அருட் சகதி | முகம் | வீசியாடும் கரம் | திரோபவம் | ஊன்றிய திருவடி | மலம்அற அழுத்தல் | சிகர முதலாக ஜெபிக்கின் அருட்பேறுளதாம் |
| 5 | ய | ஆன்மா | ஆடி (சிரசு) | அபய கரம் | அனுக்ரகம் | தூக்கிய திருவடி | அருளாற் பேரின்ப வீடருளல் | |

(2) **தூல ஐந்தொழில்,** சகலநிலைக்கு வரும் உயிர்களுக்குத் தநுகரண புவனபோகங்களைத் தோற்றுவித்தல் சிருட்டி. அவற்றில் நிலைப்பித்தல் திதி. அத்தநு முதலியவற்றை அழித்தல் சங்காரம். அநுபவிக்க வேண்டாதவற்றை மறைத்து வைத்தல் திரோபவம். அநுபவிக்க வேண்டியவற்றைத் தோற்றுவித்தல் அநுக்கிரகம். இவை உயிர்கட்காக உடலும் உலகமுமாகிய பாசத்தின்கண் நிகழ்வனவாம்.

(3) **அதிநுக்கும ஐந்தொழில்,** ஆன்மாவிற்கு அறிவித்து நிற்றல் சிருட்டி, அதனை அறிந்தவற்றுள் அழுந்தச் செய்தல் திதி. முன்னறிந்தவற்றினின்றும் பிரித்தல் சங்காரம் ஒன்றனை அறியவேண்டும்போது வேண்டப்படாத பிறிதொன்றினை அறியவொட்டாது மறைத்தல் திரோபவம். அறிந்தவற்றை அநுபவிக்கச் செய்தல் அநுக்கிரகம். இவை உயிர்களின்பால் நிகழ்வனவாம்.

இங்ஙனம் ஐந்தொழில் நிகழ்ச்சிகள் மூவகையினும் நிலை பெறுதலையுணர்க.

ஐந்தெழுத்தின் அரும்பெறல் உண்மைகளைக் குருவின் உபதேசவாயிலாக உணர்வதே சைவநான்மரபு ஆகலின் ஈண்டுச் சுருக்க வகையான் உணர்த்தப் பெற்றன.

இவ்வாறு தத்துவங்களை உணர்ந்து ஆன்மாவாகிய தன் சிறுமையும் ஒரு காரணமும் இன்றி ஒரு பயனும் எதிர்பாராது தனக்குதவுகின்ற எல்லாம்வல்ல கருணைநிதியாம் பரம்பொருளின் அளவிடற்கரிய பெருமையும் கண்டு அவ்வருளுக்குத் தன்னை அர்ப்பணம் செய்வதன்றி வேறு கைம்மாறின்மை யறிந்து, அவன் பரமோபகாரத்தை நீள நினைந்து நெஞ்சமுருகி நெக்குற்று அன்புமேலீட்டால் கண்ணீர் பொழிந்து இறைவனை நினைக்குந்தோறும் தற்போதம் குன்றி இருவினையொப்பும் மலபரிபாகமும் சத்திநிபாதமும் நிகழத் தலைவனைத் தலைக்கூடும் முத்தான் மாக்கள், கனியும் அதன் சுவையும் மலரும் அதன் மணமும், தீயும் அதன் வெம்மையும் வீணையும் அதன் இன்னிசையும் போன்று இரண்டறக் கலந்து பேரின்ப வாழ்வுறுவார்கள். சகல நிலையில் பாசமயமான தத்துவங்களோடுகூடி இரண்டறக் கலந்து நிற்பதுபோலவே, சுத்தமாகிய முத்தி நிலையினும் சிவத்தோடு இரண்டறக் கலந்தின்புற்று வாழும் உயிர்கள் என்று வேதசிவாகமங்கள் திட்டமாய்ச் சொல்கின்றன.

சூரியனது பெருங்கிரணக் கூட்டத்தூடே ஒற்றைக் கலையுடைய தேய்மதி எவ்வாறு இரண்டற நிற்குமோ அவ்வாறே எல்லாம் வல்ல முற்றறிவனைப் பொருந்திச் சிற்றறிவுடைய ஞான ஆன்மாக்களும் இரண்டறக் கலந்து இன்புறுமென்று காண்க.

அப்படியாயின், ஆன்மா சிவத்தைக் கூடுதலால் சிவத்தின் சர்வ வியாபகமாகிய பூரணத்தன்மை குறைவுறும், சிவம் ஆன்மாவைக் கூடின் பொருள் இரண்டாம் அத்துவிதம் ஆகுமாறில்லை. ஆகலின் இஃது முன்பின் முரணும் எனின், முரணாது. பார்க்கின்ற கண்ணின் ஒளி சிறிதேனும் எங்கும் விரியும் சூரியன் ஒளியுடன்கூடி இரண்டற நின்று பொருளைக் காண்பதுவும், அதனால் சூரியன் ஒளிக்கு வியாபகத்தன்மை குறைதல் இல்லாமையும், அதுபோல் ஆன்மாவும் சிவமும் கூடுதல் இழுக்கில்லாது பொருந்துமென்று விடுக்க.

சீடன் :—வாக்கு மனாதீதமாய் நிற்கும் பரம்பொருள் வடிவான எம்பெருமான்! பதியினைப்போலப் பசுவும், பாசமும் அநாதி நித்தம் (என்றும் அழிவற்றவை) எனத் திருவுள்ளம் பற்றினீர்கள். இதில் ஓர் ஐயம், பசு பாசநீக்கம் பெற்றாலொழியப் பதியைக் கூடாதே! அப்படியாயின் பாசம் தொலைந்துபோகவேண்டாமோ! பாசம் அழியாப் பொருளென்று எண்ணியது என்னையோ?

ஞானாசாரியர் :—நன்கு வினாவினை! இன்பத்தை உயிர்க்கருளும் பதியும், அதனை நுகரும் பசுவும், அந் நுகர்ச்சியின்பத்தில் விழைவுறுத்து நிற்கும் மலமும், என்றும் உள்பொருள்களே காண்.

அப்பா! இப்பேரின்பவீடு பேற்றை யடைவிக்கும் சாதனங்கள் பலவற்றினும் சிறந்த சாதனங்கள் மூன்றே. அவை, (1) குரு, (2) லிங்கம், (3) சங்கமம், (அடியார் திருவேடக்குழு) என்பன.

இம்மைப் பிறப்பிலேயே வீடுபேற்றை எய்தி வாழும் பெரியோர்கள், கற்றாவின் மனம்போலக் கசிந்துருகிப் பற்றொன்றுமின்றி, ஒரு பற்றற நின்ற பரமனையே பற்றி அவனடியார்களையும் ஆலயத்தையும் கடவுளெனவே கண்டு காணும் பொருட்களூடு கலந்தும் தோன்றாதொளித்துள்ள கள்வனைக் காணும் களிப்பாற் பெருமிதம் எய்தி, பாசமலங்களை நீக்கி அன்பே உருவாகி நின்ற சிவத்தை அன்பே காட்ட அடைந்து அன்பால் விளையும் இன்பத்தைப் பெற்று உய்குவர்.

அன்பு மிக்க மாணாக்கனே! அவ்வுலகநிலை நிற்கட்டும், இவ்வுலகிலேயே கருதிப்பார், நீ காதலிக்கும் பொருட்களால், அவற்றின் ஆக்கத்தால் உனக்கு இன்பம் விளைவது காண்கின்றனை. அன்பில்லாரைக் காணில் வெறுக்கின்றனை. போலி அன்புடையாரை உள்ளுக்குள் நகைக்கின்றனை அல்லவா? பொய்யற்ற

மெய்யன்பு ஒன்றே உன்னை இவ்வுலகினும் பரவுலகினும் நல்லின்பம் வழங்கி உய்விக்க வல்லது. இஃதே எம்மதத்தாராலும் எக்காலத்தும் எத்தேயத்தும் மறுக்கமுடியாத உண்மை எனத் தேறி அன்பையே சிவமெனக் கருதி வழிபடும் இச் சைவசித்தாந்த நன்மதத்தைப் பின்பற்றி உய்திகூடுக.

ஏனைச் சமயங்கள்போன்று, எங்கள் மதத்தைச் சார்ந்தாலன்றி உய்ய வழியில்லை; மீளாநரகம் சார்வர் எனப் பயமுறுத்துவது அன்று எங்கள் தெய்வச் சைவம்; புறச்சமயத்திருப்பினும் அவர்கள் நாளடைவில் பல பிறப்புக்களில் உண்மை உணர்ந்து மேம்படுவார்கள். எத்தெய்வத்தை வழிபடினும் அவ் வழிபாட்டை அவ்வக் கடவுள் உருவில் மகிழ்ந்தேற்பன் எங்கள் சமயங் கடந்த அதீதப் பழம்பொருளாம் சிவபெருமான் என உறுதிகூறி அறுதியிடும். இச்சமயத்தின் பெருமைகள் ஆராய்வார்க் கன்றிப் பிறர்க்குத் தோன்ற. முன்னை ஊழ்வலியால் நீ இந் நன்மார்க்கத்தை நாடினை; வாழ்க.

சீடன் :—வாழ்ந்தேன் ! கருணையங்கடலே உய்ந்தேன் ! பிறவிப் பெருங்கடல் தாண்டினேன், தாங்கள் உரைத்த கற்பகக் கருத்தை இனிக் கைவிடேன், என்னைக் கரையேற்றியருளிய சுத்த சிவமே ! தங்கள் பொன்னடிகளுக்கு என் உள்ளமும் உயிரும் காணிக்கையாகத் தந்தேன்.

தம்மை அடுத்த ஏழைகட்கு உலகினர் பொன்தருவார் உண்பொருள் தருவார் பிறவும் தருவார் தேவர் உம்மையே எனக்குதவிய உதவிக்கு வேறு கைம்மாறு காண்கில்லேன்.

> வாழிநின் திருவருள் வாழிநின் பெருஞ்சீர்
> வாழிநின் பதங்கள் வாழி வாழியவே.

என்று வழிபட்டு வணங்கிச் சீடன் ஏகனாய் நின்றும் இறைபணி நின்றும், பேரின்ப நுகர்ச்சியி லீடுபட்டு இவ்வுலகிலிருந்தே முத்திப் பேற்றை யடைந்து வாழ்கின்றனன்.

முற்றும்

திருச்சிற்றம்பலம்

(குறிப்பு :—உண்மை விளக்கநூலை மொழிபெயர்த் தெழுதப்பட்டதாயினும் ஆங்காங்கே அதிற் கூறாத சிலவற்றையும் விளக்கங்கருதிச் சேர்க்கப்பட்டிருத்தல் கற்றோர்க்குப் புலனாம்.)

# சாந்தம் ஒரு மெய்ப்பாடா?

[திரு. மு. சதாசிவம், எம். ஏ.]

உணர்ச்சியை மையமாகக்கொண்டு எழுந்த காட்சிக் கருத்தோவியமே கவிதை எனப்படும். ஆறறிவுடைய மனித மனத்தின் வியத்தகு நுண்மைப் பொருள்களுள் உணர்ச்சியே (Emotion) தலைசிறந்து விளங்குகிறது. உணர்ச்சிகள் பலதிறத்தனவாய் மனிதரிடைத் தோன்றுகின்றன. உணர்ச்சிகளாலேயே மனித இனம் இயங்குகிறது, வாழ்கிறது, வளர்கிறது. பண்பட்ட உணர்ச்சிகளின்றேல் மனிதரும் மாக்களாய் மலங்கித் திரிதர்வர்.

ஓரறிவுயிர்முதல் ஐயறிவுயிர் வரையுள்ள பிறவுயிர்கட்கும் உணருந்தன்மை யுண்டாயினும், மனிதப்பிறப்பின் மேன்மைக்கு உற்றதொரு காரணமாய் விளங்கும் மனித மனம், ஆன்மா இவற்றின்பால் முகிழ்த்து, உலகத்தின் அனைத்துயிர்களையும் உடன் பிறப்பாகக்கருதி, இதயநடுவிலே வீற்றிருக்கும் இறைவனை யுணர்ந்து, கடவுட் காட்சியிலே நிலைநிற்கும் உணர்ச்சி நிலைகள் யாவும் மனிதர்க்கே உரியவையாய் இருக்கின்றன.

உலக இலக்கியங்கள் எல்லாம் மனித இதயத்தின், அறிவின், ஆன்மாவின் ஒளிநிலை விளக்கங்களாய்த் திகழ்கின்றன. உலகத்துக் கவிஞர்கள் தாங்கள் பெற்ற உணர்ச்சிகளை, அநுபவங்களைப் பிறரும் பெற்றின்புறவேண்டுமென்ற விருப்பால் இலக்கியங்களைப் பல்வேறு மொழிகளில் வடித்தளித்துள்ளனர்.

ஒரு சிறந்த இலக்கியத்தில் இலக்கிய ஆசிரியரின் வாழ்க்கைபற்றிய காட்சி (Vision of life), உணர்ச்சி, கருத்து இவை மூன்றும் ஒருங்கே காணப்படும். இலக்கியங்களில் இம்மூன்றையும் தெள்ளிதின்கண்டுணர்பவரே இலக்கிய இன்பம் பெற்றவராவர். இலக்கிய ஆசிரியரின் வாழ்க்கைக் காட்சியை இலக்கியம்படிப்பவரின் ஆன்மா காணவேண்டும்; இலக்கிய உணர்ச்சியை இதயம் உணரவேண்டும்; இலக்கியக் கருத்துக்களை மனம் அறியவேண்டும். எனவே இலக்கியத்தைத் துய்ப்பதற்குக் கற்பவரின் ஆன்மாவும், இதயமும், மனமும் ஒருங்கு நின்று விழிப்புடன் செயல்புரியும் நிலை (Awakening Sensibility) இன்றியமையாதது எனலாம்.

இதயத்துட் கிடந்த உணர்ச்சிகள் உடற்கண் வெளிப்படும் போது மெய்ப்பாடுகள் என்னும் பெயரினைப் பெறுகின்றன. அவ்வுணர்ச்சிகள் ஆன்மாவுடன் தொடர்புகொள்ளும் போது சுவை (Taste) பிறக்கிறது. இலக்கிய ஆசிரியரின் காட்சி

களை "உயிராவணமிருந்து உற்று நோக்கி உள்ளக்கிழியின் உருவெழுதிப்" பார்க்கும்போது படிப்போர்க்குத் தோன்றும் சுவையே இலக்கியச் சுவையெனப் போற்றிக் கூறப்படுகிறது.

உள்ளத்துத் தோன்றும் உணர்ச்சிகளும், அவை உடம்பில் வெளிப்படும் மெய்ப்பாடுகளும், அவை ஆன்மாவில் தோற்றும் சுவைகளும் இத்துணையென வரையறுத்துக்கூறப் பெற்றிலவா கலின் எண்ணிலவா மெனக் கொள்ளலாம். மெய்ப்பாடுகள் எல்லாம் விளங்கித் தோன்றுதற்கிடம் நாடக மேடையே. பரத நாட்டியம் சிறப்பாக மெய்ப்பாடுகளைத் தோற்றுவித்துக் காண்பார் உள்ளத்துச் சுவையைத் தோற்றுவிக்கும் இயல்பிற்று. கதக்களியும் இப்பெற்றியதே. பிற நாடகங்களிலும், திரைப் படங்களிலும் மெய்ப்பாடுகள் தோன்ற நடிப்பதுவே கலையாகப் போற்றப்பட்டு வருகிறது. இலக்கியத்தில் புலப்படும் மெய்ப் பாடுகள் எல்லாம் அகக்கண்ணில் காண்டற்குரியவை; நாடகம்-திரைப்படங்களில் அறியப்படுவது போலப் புறக்கண்ணால் காண முடியாதவை. ஷேக்ஸ்பியர், காளிதாசர் போன்ற பெரு நாட கப்புலவர்களின் நாடகங்களைப் படிப்பதைக் காட்டிலும் நாடக மாக நடிப்பதைக் காணவே பலரும் விரும்புவர். ஆனால் இலக் கிய இன்பந் துய்க்க விரும்புவோர் சொற்களில் தேங்கியிருக்கும் பலவகை மெய்ப்பாடுகளையும் சுவைகளையும் மனக்கண்ணாலறிந்து இன்புற விழைகுவர். ஏனெனில் இலக்கியத்தில் காணப்படும் நுண்ணிய பல்வேறு மெய்ப்பாடுகளை நாடகத்திலோ, திரைப் படத்திலோ காணமுடியாது. எனவே நாடகம் பார்க்கும் சுவை யினும், இலக்கியம் படிப்பதால் பெறும் சுவை நுண்ணியது, பெரிது.

உடலாற்றலுக்கு ஓர் எல்லை (limitation) உண்டாகலின், பல் வேறு உள்ளத்து உணர்ச்சிகள் மெய்ப்பாடாக வெளிப்படுவதில்லை; வெளிப்படுத்தவும் முடிவதில்லை. ஆதலினாற்றான் உடலில் விளங்கித் தோன்றும் மெய்ப்பாடுகள் இத்துணையென வரையறுக்க முற் பட்டனர் இலக்கண நூலோர். நாட்டிய இலக்கணம் வரைந்த பரதமுனிவரும், இயல் இலக்கணம் வரைந்த தொல்காப்பியரும் மெய்ப்பாடுகளை எட்டெனக் கொண்டனர். நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்ற எட்டு மெய்ப்பாடுகளை விதந்து கூறியுள்ளார் தொல்காப் பியர். வடமொழி யிலக்கணத்தின்கண் கூறப்படும் எட்டு மெய்ப் பாடுகட்கும், தொல்காப்பியர் கூறிய மெய்ப்பாடுகட்கும் பல வேறுபாடுகள் உள்ளன. எட்டெனக் கூறப்படுபவை சிறப்பு மெய்ப்பாடுகள் எனலாம். வடமொழியிலும், தமிழிலும் துணை மெய்ப்பாடுகள் எனப் பல கூறப்படுகின்றன. வடமொழியில்

மெய்ப்பாடும், சுவையும், பாவம், ரசம் என்ற இருவேறு சொற்களால் குறிக்கப்படுகின்றன. தொல்காப்பியர் மெய்ப்பாட்டையும் சுவையையும் ஒன்றாகவே கூறிப்போந்தார். மெய்ப்பாட்டிற்கும் சுவைக்கும் பிறப்பால் ஒற்றுமை யுண்டேனும், பயனால் சில நுண்ணிய வேறுபாடுகள் உள்ளன.[1] மெய்ப்பாடாக வெளிப்படுத்தப்பெறாத உணர்வுச்சுவைகள் பல உள்ளன; அவற்றுள் சிறந்தது 'சாந்தம்' என்னும் சுவையாகும். தொல்காப்பியரோ, பரதரோ 'சாந்த'த்தை ஒரு மெய்ப்பாடாகக் கொள்ளவில்லை. பிற்காலத்தவரே இதனை ஒரு சுவையாகக் கொண்டனர்.

'சாந்தம் உலகியல் நீங்கினார் பெற்றியாகலின் அஃதொன்று மொழித்து ஏனையஎட்டுமே நூல்களிற் கூறப்படுகின்றன' என்று பேராசிரியர் கூறுவது ஓர் அமைவு கூறுதலாமேயன்றி உண்மைக் காரணமாகாது. உலகியல் நீங்கினார்—அஃதாவது துறவறத்தார் பெற்றியை நூலில் கூறலாகாது என்று விதிவகுப்பது பொருத்த முடைத்தோ? உலகத்துத் தலைசிறந்த இலக்கியங்களுள் ஒன்றான திருக்குறளில் துறவறவியல் என்ற தனிப்பகுதி காணப்படுவது கடியத்தக்கதொன்றாகுமோ? மற்றும் நீத்தார் பெருமை என்று நூலின் தொடக்கத்திலேயே உலகியல் நீங்கினாரின் பெருமையைத் திருக்குறள் எடுத்துரைக்கிறதே! ஆதலின் சாந்தம் நூல்களில் கூறப்படாமைக்கு இஃது ஏற்ற காரணமாகாது. தொல்காப்பியர் சாந்தம் என்பதை மெய்ப்பாட்டியலிற் கூறாமைக்குச் சிறந்த காரணம் அது ஒரு மெய்ப்பாடன்று என்பதே. அது ஒரு சுவையே.

சாந்தம் என்பதற்கு 'நடுவுநிலைமை' எனப்பொருள்கொண்டு அதை ஒரு மெய்ப்பாடாகவும், சுவையாகவும் கொள்வர் இளம்பூரணர். ஆனால் 'மெய்யின்கண் [illegible] தோன்றுதலின் மெய்ப்பாடாயிற்று' என்றும், 'நடுநிலைமை என்பது [illegible] தொன்றானும் விகாரப் படாமை' என்றும் அவரே பொருளுரைத்திருப்பதனால், அஃது ஒரு மெய்ப்பாடன்று என்பதே அவருக்கும் கருத்தாகும் எனக் கொள்ளலாம். ஒவ்வொரு சுவைக்கும் ஏற்ற ஒரு மெய்ப்பாடு கூறவிரும்பியே இளம்பூரணர் சாந்தச்சுவைக்குச் சாந்தம் என்னும் மெய்ப்பாட்டைக் கூறினாராகல் வேண்டும். பேராசிரியர் தம்முரையில் சாந்தம் என்பதற்குச் 'சமநிலை', எனப் பொருள் கொண்டு அது மெய்ப்பாடாகக் கொள்ளத்தக்கதன்று எனக் கூறுகிறார்: "மற்றிவ் வெட்டனோடுஞ் சமநிலைகூட்டி ஒன்பது என்னுமோ நாடகநூலிற் போல வெனின், அதற்கு ஓர் விகாரமின்மையின் ஈண்டுக் கூறியதிலன் என்பது; அதற்கு விகார

1. இவை அடுத்த இதழில் வெளிவரும் கட்டுரையில் விளக்கிக் கூறப்பெறும்.

முண்டெனின் முன்னையெட்டனுள்ளஞ் சார்த்திக் கொள்ளப் படும்" எனக் குறிப்பிடுகிறார். தொல்.௧௨௦௬ஆம் நூற்பாவில் 'நடுவு நிலை' என்பது ஒரு துணைமெய்ப்பாடாகக் கூறப்படுகிறது. இச் சொல் மெய்ப்பாட்டைக் குறிக்காது என்றும், சுவையினையே குறிக்கும் என்றும் பேராசிரியர் கருதுகிறார். "நடுநிலைமை யென்பது, ஒன்பது சுவையுள் ஒன்றென நாடக நிலையுள் வேண்டப்படுஞ் சமநிலை. அஃதாவது 'செஞ்சாந்தெறியினும் செத்தினும் போழினும் நெஞ்சோர்ந்தோடா நிலைமை'" என நவில்கிறார்.

சுவை மெய்ப்பாட்டுச்சுவை எனவும், அறிவுச்சுவை (Intellectual taste) எனவும் இருவகைப்படும். புறப்பொருள் அல்லாத கருத்துப்பொருள்கள் (Abstract things) பற்றிய உணர்வுகளைப் பற்றியெழுவன அறிவுச்சுவை எனப்படும். சாந்தம் அல்லது சமநிலை ஓர் அறிவுச்சுவையே. அச்சுவை நிகழும்போது மெய்ப் பாடு தோன்றுவதில்லை.

சாந்தச்சுவையே சுவைகளுக்கெல்லாம் அரசன் ஆகும். மற்றச் சுவைகள்யாவும் இல்லாது போகும்போதுதான் இச்சுவை தலையெடுத்துநிற்கும். வாழ்க்கைப் பேரின்பத்திற்கு இச்சுவை மிக இன்றியமையாதது. இச்சுவையினைத் துய்த்துணர்ந்த யோகிகள், ஞானிகள், ஆன்றவிந்தடங்கிய கொள்கையினர் எல்லாம் பிற சுவைகளை மதிப்பதில்லை.

உள்ளத்துச் சுவைகள் அனைத்தும் முடிவில் சாந்தம் அல்லது இன்ப அமைதியையே அவாவி நிற்கின்றன. துன்பியல் நாடகத்தில் கண்ணீர் வடிப்பவர் ஒருவிதமான மன அமைதியைப் பெறுகின்றனராதலின், துன்பியலின் குறிக்கோள் சாந்தச் சுவையைத் தோற்றுவிப்பதே எனலாம். துன்பத்திற்கும் துன்பச் சுவைக்கும் வேறுபாடுண்டு. இதனை ஓர் எடுத்துக்காட்டால் விளக்கமாயறியலாம். உண்மை வாழ்க்கையில் தன் ஒரு மகனை யிழந்தானொருவன் துன்புற்றுத் துடிதுடித்து அளப்பரும் துயரம் எய்துவது இயல்பே. அவனே ஒரு துன்பியல் நாடகத்திலோ, திரைப்படத்திலோ, மகனையிழந்து ஒருவன் ஆற்றாது புலம்பும் காட்சியைக் காணநேர்ந்தால் தன் வாழ்க்கையனுபவத்தை நினைவு கூர்ந்து ஆற்றாது கண்ணீர் பெருக்கி நிற்பான். உண்மை வாழ்க் கையில் அவன் துன்புறும் போது அவனுக்கு ஏற்படுவன மனப் புண்ணும், உடல்கேடும். திரைப்படத்தைக்கண்டு அவன் கண்ணீர் வடிக்கும்போது அவனுக்கு மீண்டும் மனப்புண் உண்டாவதில்லை; மன ஆறுதலே உண்டாகிறது. திரைப்படத்தில் அல்லது நாட கத்தில் வரும் அவலச்சுவைகள் இவ்வாறு 'மனச்சாந்தி'யைத்

தருவனவாகவே உள்ளன. இதனாலேயே இன்பியல் நாடகங்களைக் காட்டிலும் துன்பியல் நாடகங்களையே மக்கள் பெரிதும் போற்று கின்றனர். ஷேக்ஸ்பியரின் புகழ்வாய்ந்த நாடகங்கள் யாவும் துன்பியல் நாடகங்களே.

இன்பம் துன்பமாவதும், துன்பம் இன்பமாவதும் இயல்பே. ஏனெனில் அடிப்படையில் அவையிரண்டும் ஒன்றே. உணர்ச்சிப் பாட்டிலும், சுவைப்பாட்டிலும் அவை வெவ்வேறு உருவாகத் தோற்றுவிக்கப்படுவதாலேயே வெவ்வேறு பயன்களைத் தருவன வாயிருக்கின்றன. மேலும் ஒருவர்க்கு இன்பந்தரும் பொருளே மற்றையோருக்குத் துன்பம் தருவதாக அமைவதை உலகியலில் யாண்டும் காணுகிறோம். 'ஒருவர்க்கு அமுது மற்றவர்க்கு நஞ்சு' என்ற பழமொழி வழங்கப்படுவதும் இவ்வுண்மையினையே வற் புறுத்துகிறது. எடுத்துக்காட்டாக, மீன் விற்று வாழும் வலைஞன் அருகில் பூக்கூடை ஒன்று இருக்கும்போது அவனால் உறக்கங் கொள்ள முடிவதில்லை. மீன் நாற்றமே அவனுக்குப் பிடித்த இன்ப மணமாகத் தோற்றுகிறது. பூக்காரனுக்கோ மீன்நாற் றம் வீசினால் தூங்க முடிவதில்லை. இவ்வாறு பழக்கம் காரண மாக ஒருவருக்கு இன்பந்தரும் பொருளே பிறருக்குத் துன்பம் தருவதாகக் காணப்படுகிறது. எனவே இன்பம் துன்பம் எல் லாம் பெரும்பாலும் மனிதமனத்தைப் பற்றியே அமைவன என் றறிகிறோம்.

இன்பத்தையும் துன்பத்தையும் ஒரு படித்ததாகக் கருதும் நிலையே 'சாந்த' நிலையாகும். வாழ்க்கையின் அடிப்படைச் சுவை யான பேரின்பம் இச்சாந்த நிலை எய்தியோருக்கே எய்தும். மனித வாழ்க்கையின் அடிப்படை யுண்மையைக் கண்டுணர்ந்த புத்தர் எய்தியநிலை சாந்தநிலையே. புத்தர் கூறியாங்குத் துன்பங்கள் யாவும் ஆசைமனத்தால் விளைவனவேயாயினும், மனிதமனம் அத் துன்பங்களினூடே ஒருவகை இன்பத்தைக் காண முற்படுகிறது. உடனடியாகப்பெறும் சிறு இன்பத்திற்காக அடுத்துவரும் பெரிய துன்பத்தையும் பொறுத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறது. துன்பத்திலும் சிறிது இன்பம் கலந்தேயிருக்கிறது. துன்பத்தை அனுபவித்து அனுபவித்துச் சிலர் அதை இயல்பாகவும், ஓரளவு இன்பமாகவும் கொண்டுவிடுகின்றனர். சென்னைநகர்க்கண் வாழும் பல்லாயிரம் வீடில்லாதோர் இவ்வாறு பலவகைத் துன்பங்களைப் பலகாலம் பொறுத்துக்கொண்டு அவற்றை இயல்பாகவும், ஓரளவு இன்பந் தருவதாகவுமே கருதி வாழ்ந்துவருகின்றனர். மனித மனம் துன்பத்தை இன்பமாக மாற்றவும், இன்பத்தைத் துறக் கவும், இன்பத்தின் பயனைத் தலைகீழாக மாற்றவும், இன்பத்தை யும துன்பத்தையும் ஒன்றாகக் கருதவும் வல்லதா யுள்ளது. பல

வகை மெய்ப்பாடுகளும், சுவைகளும் மனித மனத்தின் பலவகை நிலைகளே. மனித மனத்தின் உயிர்நிலைச்சுவை சாந்தமே. சாந்தச் சுவையே தெய்விக இன்பத்தின் பயனாக விளங்குகிறது.

தமிழிலக்கியத்தில் சாந்தச்சுவை மல்கிய பாடல்கள் பல்கிக் காணப்படுகின்றன. தெய்வத் திருமறைப் பனுவல்களான தேவார, திருவாசக, திவ்வியப்பிரபந்தங்களிலும், தாயுமானவர், பட்டினத்தார், இராமலிங்க அடிகள் போன்றோர் நூல்களிலும் பரக்கக் காணப்படுகின்றன. தெய்வீகப் பேரின்பம் சாந்தச்சுவை யோடு ஒப்புமை கொண்டுள்ளதாகலின் அருட்பெருங் கவிஞர்கள் இச்சுவை கெழுமிய கவிதைகளைப் பாடியருளினர். பல்சுவைப் பெருங்காப்பியமாகத் திகழும் கம்பராமாயணத்தில் காணப்படும் சாந்தச்சுவை ததும்பும் பல பாடல்கள் பயின்று சுவைத்தற் குரியன. இராமனைச் 'சாந்த' மூர்த்தியாக வரைந்துகாட்டும் கம்பர் அசோக வனத்துச் சீதையின் வாயிலாக இராமனின் குணங்களை எடுத்தோதிச் சாந்தச் சுவையைப் பெருகுவிக்கிறார். அவற்றுள் ஒரு பாடல்:

" மெய்த்தி ருப்பதம் மேவென்ற போதினும்
இத்தி ருத்துறந் தேகென்ற போதினும்
சித்தி ரத்தின் அலர்ந்தசெந் தாமரை
ஒத்தி ருக்கும் முகத்தினை உன்னுவாள்."

அவலம் கைம்மிக்கு நைந்து அழியும் சீதையினிடத்துச் சாந்தச் சுவை ஏற்படுத்தி முரணழகு தோற்றுவித்த கம்பரின் கைவண் ணம் கற்பார்க்குக் களிப்பூட்டுகிறது.

---

## கோளாறு திருப்பதிகச் சிறப்பு

கோள்நூல் குறிப்புத்தாள் கோள்களது கொண்டுய்ப்போர்
தாள்கோள் வணக்கத்தால் தானகலா—கோள்முதலாம்
செம்பொருட் பூசையினால் சேர்துன் பகன்றின்பாம்
சம்பந்தர் கோளறுபாச் சார்ந்து.

கோளால் வருந்துன்பம் கூடா தகன்றின்பம்
நாளால் உலகெய்த நல்லருளாம்—வாளார்கண்
மாமலையாள் பங்கனடி வாழ்த்தி மறைக்கோளறுசீர்
ஆம்பதிகம் ஓதுகவாங் காங்கு'

—இனியன்

---

# கோளின்னல் சிவனை வழிபடச் சேராது

கோளால் வருந்துன்பம் என்று குறிக்கப்படுவது உயிர்கள் முன் செய்துள்ள தீவினைப்பயனேயாம். அத்தீவினைப் பயனை அடைவிக்கும் கோள்களாலும் நீங்கமாட்டாது, அடையப்படும் உயிர்களாலும் நீங்காது. அப்பயன் தானாகவும் நீங்காது. அதனை நீக்கியருள்வோன் விழுமியமுழுமுதற் சிவபெருமான் ஒருவனே. என்னை, அப்பயன் அவன்றன் திருவாணையால் வருதலானென்க. இதனையோர் ஒப்பின் வாயிலாகக் காணலாம்.

வேந்தனுடைய ஆணையும் அதனைக்கொண்டு செலுத்துவோனும், அவ்வாணை வரையப்பட்ட எழுத்தும் தத்தம் எல்லையில் நிற்பனவன்றி அவை செயற்படாமல் நீங்குவன அல்ல. ஆணையை மீட்கும் உரிமை வேந்தன் ஒருவனுக்கே உளதாகும். இதுவே மேலதற்கு ஒப்பாகும்.

கோளினால் வரும் இன்னல்—துன்பம் நீங்குதல் வேண்டின் திருவருளால் சிவன்தாள் வழிபட்டு அவனுக்கு என்றும் அடிமையாதல் வேண்டும். அவன் திருவடிச்சார்பே மாறிலாத நிலைத்த பெருஞ் சார்பாம். சார்தரு நோய் இச்சார்பினால் நீங்குமுண்மை வரும் செந்தமிழ்ப் பொதுமறையானுணர்க:

"சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்" —திருக்குறள், ௩௫௯.

இம்முறையினை யகற்றிக் கோளினை வழிபடுவதாற் றுன்பம் நீங்குமெனச் சிலர் உண்மையுணராது கூறித் தம்மையும், பிறரையும் நெறியல்லா நெறியிற் புகுத்தி இழுக்குறுகின்றனர். இவ்விழுக்கினையகற்றி விழுப்பேரொழுக்கத்தின் உலகோரை உய்விக்கவே சைவசமய முதல்வருள் முதல்வராகிய ஓதாதுணர்ந்த மூதறிஞர் திருஞானசம்பந்தப் பெருமானார் தாம் பாடியருளிய செந்தமிழ்த் திருமாமறையின்கண் ஏறத்தாழ ஆயிரத்துநானூறு யாண்டுகளுக்குமுன் 'கோளறுதிருப்பதிகம்' ஒன்று கட்டளையிட்டருளினர். அதனுள் 'ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியா ரவர்க்கு மிகவே' எனத் திருவாணை யருளியுள்ளனர். இவ்வுண்மையுணர்ந்த செந்நெறிச் செல்வர்கள் அன்றுதொட்டு இன்றுகாறும் அத்திருப்பதிகத்தினைக் காதலுடன் ஓதிச் சிவபெருமானை வழிபடும் நற்றவம் புரிந்து கோளின்னலகன்று நன்னலம் எய்தி நாளும் இன்புற்றுவருகின்றனர்.

இதுபோல் நோய், வறுமை, நஞ்சு, இடர், பகை முதலிய பலதுன்பங்கள் அகலச் செந்நெறி முதல்வர்கள் பாடியருளியுள்ளார். செந்நெறிச் செல்வர்கள் அவ்வவற்றையோதிச் சிவனை வழிபட்டு அவ்வத்துன்பங்களினின்றும் நீங்கி இந்நாளிலும் இன்புற்று வருகின்றனர். இத்தகைய திருப்பதிகங்களைத் தொகுத்து

**'வேண்டுகோள் பதிகங்கள்'** எனப் பெயர் தந்து ஐந்து புத்தகங்களாக நம் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் பல ஆண்டுகளுக்கு முன்னரே வெளியிட்டுள்ளனர். இப்புத்தகங்கள் நனி மிகக் குறைந்த விலைக்கே கொடுக்கப்படுகின்றன.

இவற்றுள் 'கோளறுதிருப்பதிகம்' முதல் புத்தகத்துள் மூன்றும் வரிசையில் அமைந்துள்ளது. வருந் தைத்திங்கள் இருபத்தோராம் நாள்முதல் இருபத்து மூன்றும் நாள்முடிய எட்டுக்கோள்கள் மகரவீட்டில் ஒன்று கூடுகின்றன. அதனால் உலகினுக்குப் பலவகை இன்னல்கள் நேர்தல் கூடும். அவ்வின்னல்கள் நீங்கச் செந்நெறிச் செல்வர்கள் வீட்டிலும், தொழுகைக் கூடத்தும், திருமடத்தும், திருக்கோவில்களிலும் தனித்தும் ஒன்று கூடியும் 'கோளறுதிருப்பதிகத்தை'க் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுதல் வேண்டும். ஓதிச் சிவபெருமானுக்குச் சிறப்பு வழிபாடு செய்தல் வேண்டும். அத்திருப்பதிகத்தை ஒலிபெருக்கியின் வாயிலாக எங்கணும் பரப்புதல் வேண்டும். இதனால் அவ்வின்னல் நீங்கும். செவ்விய நன்னலமோங்கும் இவை முற்றும் உறுதி.

இத்திருப்பதிகத்தைக் கோள்களின் இன்னல் நீங்கற் பொருட்டுத் திருக்கோவில்களெல்லாவற்றிலும் மார்கழித் திங்கள் முதல்நாள் முதல் தைத்திங்கள் இருபத்துமூன்றும் நாள் முடிய முற்றுக ஓதுவார்களைக் கொண்டு சிவபெருமான் திருமுன்னிலையில் ஓதச் செய்தல் வேண்டும். அத்திருப்பதிகத்தினை ஒலிபெருக்கிவாயிலாகவும் ஓதி ஒலிபரப்புதல் வேண்டும். எல்லோரும் அவரவர் இருக்கும் இடங்களில் நாள்தோறும் மேற்குறித்த நாள்கள் முற்றும் ஓதிவருதல் வேண்டும்' என்பது ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடர் ஆசாரியசுவாமிகளது அருள் எனச் சுதேசமித்திரன் 29—11—1961இல் வெளியான 'ஞானசம்பந்தர் பாடல்களைப் பாராயணஞ் செய்ய வேண்டுகோள்' என்னுந் தலைப்பில் வெளிவந்துள்ளது. இத்தகைய சிறந்த கட்டளையை ஆசாரிய சுவாமிகள் உற்றநேரத்து உலகத்துககருளியமையைப் பாராட்டுகின்றோம்.

பேரின்னலின் வரவுணர்ந்து அதனை நீக்கக் கைக்கொள்ளுதற்குச் சிறந்த மந்திரமாகத் திகழும் இத்திருப்பதிகத்தின்வாய்மையினை உலகோரும் உயர்ந்தோரும் இப்பொழுதுதான் உணருகின்றனர். கழகத்தார் இதனை முன்னரே உணர்த்தியுள்ளனர். **இனியேனும் எல்லாரும் எல்லாத் திருப்பதிகங்களையும் எல்லாக் காலங்களிலும் எல்லா இடங்களிலும் இயல்புறவோதி நல்வாழ்வு எய்துவார்களாக.**

---

# எண்ணுப் பெயர்ப் புணர்ச்சி ஆராய்ச்சியில் ஐயங்கள்

[திரு. செ. பொதுவன்]

பெருந்தகை திரு. தி. சங்குப்புலவர் அவர்கள் 'எண்ணுப் பெயர்ப் புணர்ச்சி' என்ற தலைப்பின் கீழ் (சிலம்பு ௩-௬- பக்கம் ௮௫ இல்) அரியதோர் ஆய்வுக் கட்டுரை வரைந்திருந்தனர். அதனைப் படித்த அடியேற்கு ஐயங்கள் அளப்பிலவாய் முடிந்தன.

(௧) தமிழின் ஆற்றொழுக்கிகவாமல் புணர்ச்சி விதி கூறிய தொல்காப்பியர் மேல் கட்டுரையில் புலவர் கூறியவாங்கு பொருள்பட ஊழிறப்ப விதி கூறினரோ? ஆயின் காரணம் யாது?

(௨) 'ஒன்பது' என்பது 'ஒன்றில்லாப்பத்து' என்பதின் மரூஉ மொழி ஆயின், தொண்ணூறு தொள்ளாயிரம் என்பன முறையே பத்தில்லா நூறு, நூறில்லா ஆயிரம், என்பனவற்றின் மரூஉ வாக அன்றோ இருக்க வேண்டும்? அவ்வாறில்லாமைக் குக் காரணம் யாது?

(௩) தொண்ணூறு, தொள்ளாயிரம் என்பன புலவர் கூறியவாங்கு, தொள்ளை நூறு, தொள்ளை ஆயிரம் எனக் கொள்ளின், தொண்ணூற்றொன்பது (௯௯. 99) தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது (௯௯௯, 999) என்பனவும் முறையே அவற்றின் தொளையுண்டனவல்லவோ? இவையும் தொட்டுண் டிருப்ப பத்தும் நூறும் குறைந்தவற்றை மட்டும் தமிழர் பொருணெறியின்றி வழங்கியிருப்பரோ?

(௪) பொருணெறியின்றித் தொள்ளை நூற்றைத் தொண்ணூறு என்றும் தொள்ளை ஆயிரத்தைத் தொள்ளாயிரம் என்றும் வழங்கினரெனின் ஒன்பதை (௯, 9) தொட்பது (தொள்ளைப் பத்து) என்று வழங்காது ஒன்பது என்று வழங்கக் காரணம் என்ன? அன்றாயின் வாய் வந்தவழி யெல்லாம் மொழியை வழங்குவதோ?

(௫) "பாழென காலென பாகென வொன்றென
இரண்டென...............................
.............................தொண்டென
நால்வகை யூழியெண் நவிற்றுஞ் சிறப்பினை"

என்ற பரிபாடற் பகுதியில் வரும், 'தொண்டு' என்பது என்ன ?

இன்னும் இவையொப்ப, பல்லையங்களிடை மயங்குகின்றேன். யான் கண்ட முடிபொன்றும் உண்டு. அஃதும் எல்லாராலும் ஏற்றுக்கொள்ளற் பாற்று என ஐயுறுகின்றேன். ஐயுறவகற்றி நன்முடிபு பெரியோர்களால் விளக்கம் பெறவேண்டும் என்பது கருதி என் முடிபும் தருகின்றேன் :

'ஒள்' என்பது 'தொடர்தல்' பொருளை உணர்த்தும் ஓரடி சொல்.

காட்டு :—

ஒள் + து = ஒட்டு = இரு பொருள்களைச் சேர்.

ஒட்டு—ஒடு— தொடர்தற் பொருளில் மூன்றும் வேற்றுமை யுருபு.

ஒட்டு + அடை = ஒட்டடை = சிலந்திப் பூச்சி தன் வாய் நூலால் வெவ்வேறு இரு பொருள் களிடை ஒட்டி அடைந்திருக்கும் கூடு.

ஒள் — தொள் — தொடு = தொடர்புண்டாக்கு

தொடு — தொடர் — தொடர்பு

தொடக்கு = கட்டு

தொள் — தோள் — தோட்டி = கைக்கெட்டாத பொருள்களாகப் பெற அதனோடு கையைத் தொடர்புறுத்தி நிற்கும் தொரட்டு.

தொடை, தொடையல், தொண்டகம் (ஆனிரை தொடர் புடைமை அறிவிக்கும் பறை, ஆகோட்பறை) போன்ற எண்ணில் சொற்களால் 'ஒ' என்பது அப்பொருளுணர்த்தும் ஓரடிச்சொல் என்பது தெளிவாம்.

எனவே,

ஒன்று ஒன்பது ஒல்கியது, இரண்டு என்பது இருமை (ஒன்றினும் பெருமை) உடையது; மூன்று என்பது (இரண்டி னும்) மூத்தது, நான்கு என்பது (மூன்றினும், ஐந்தினும்) நால் குவது அஃதாவது அண்டித் தொங்குவது, ஐந்து என்பது (மாந்தனின் ஒருகைவிரலின் எண்ணிக்கையின் இறுதியாதலின்) ஐது, அஃதாவது தலைமையுடையது. ஆறு என்பது பின்னும் ஆற்றில் ஏறிச் செல்வது, ஏழு என்பது (பின்னும்) எழுவது (இஃது ஆற்றில் இறங்கிச் செல்வதல்ல எழுந்து - அஃதாவது

ஏறிச் செல்வது என்பதைத் தெளிவாக்கி நின்றது), எட்டு என்பது (மேனிலையை) எட்டிப் பார்ப்பது, பத்து என்பது பல்கியது (பெருகியது) என்று சீரிய பொருளைத் தந்து நின்றாற் போல 'தொண்டு' என்பது எட்டையும் (அ. 8) பத்தையும் (ய. 10) தொடர்புறுத்துவது என்னும் பொருள்படும்.

இவ்வாறே 'ஒண்பது' என்பது எண்பதையும் நூறையும் (நூறு = துகள், பல்துகளின் சேர்க்கை போன்றதால் நூறு என்றனர்.) பத்தின் முறையானே ஒட்டிவைப்பது என்றும்,

தொண்ணூறு என்பது எண்ணூறையும் ஆயிரத்தையும் (ஆய் + இரு + அம், இருமை, பெருமை, வினைத்தொகை) நூற்றின் முறையானே தொடுத்து வைப்பது என்றும்,

தொள்ளாயிரம் என்பது தொண்டு ஆயிரம் சேர்ந்தது என்றும் பொருள்பட மக்கள் வழங்கியிருப்பர். இஃதேபோ னிற்க மாந்தரின் வேட்கை வரம்பிலது.

எட்டு (அ. 8) பொன்னைப் பெற்றவன் மேலும் ஒரு பொன் அதனோடு ஒட்டியதும் பக்கத்துக்கு இன்னும் ஒன்றே குறையாக உள்ள காரணத்தால் அதனை எட்டின்மேல் ஒட்டியது என்னும் பொருள்படத் தொண்டு என்று கூறிய வழக்கை மாற்றி மேல் புலவர் கூறியாங்கு ஒன்றில் பத்து என்னும் பொருள்பட 'ஒன்பது' என்று கூறினான். ஒன்பது என்பதற்கும், ஒண்பது (கூய, 90) என்பதற்கும் பேச்சால் எளிதில் வேறுபாடு காண மாட்டாது இடருற்றவன் ஒண்பதை (90) தனது கழிபெரு வேட்கையால் தொண்ணூறு என்றும், தொண்ணூற்றைத் தொள்ளாயிரம் எனவும் இறக்கிக்கூறி முடித்தான். இந்நிலை காரணமாகவே நமக்கு எண்ணுப் பெயர் பற்றிய பல்லின்னல்கள் நேர்ந்துள்ளன. தொண்டு என்னும் வழக்கும் அதன் கருத்தை ஒட்டிய ஏனையவும் தொல்காப்பிய காலத்திற்கு முன்னமேயே அழிந்திருக்க வேண்டும்.

இதுகாறும் எளியேன் கூறியவற்றால் நோக்கின் எண்ணுப் பெயர்ப் புணர்ச்சிக்கு எவ்வகையான இடையூறும் இருக்காது என்பது என் எண்ணம். இதிலும் இடையூறுகள் இருக்குமாயின் அறிஞர்கள் ஆய்ந்துணர்த்தி என்னுடைய ஐயங்களை அகற்ற வேண்டுகின்றேன்.

புல்லே னுரையும் பொருந்தின் மகிழ்ந்தினிது
புல்லும் புலவ ருளம்.

# திருப்பனந்தாள் மடத்துத் திருப்பணிகள்

தமிழ்நாட்டில் சைவநெறி தழைத்தோங்குவதற்காகப் பல மடங்கள் தோன்றின. அவற்றுள் மிகவும் குறிப்பிடத்தக்கவற்றுள் ஒன்று திருப்பனந்தாள் மடம். இத்திருமடம் சைவநெறி மட்டுமன்றி ஒல்லும் வகையான் அறவினையெல்லாம் ஓவாது செய்து வருகின்றது. இதுவரை முந்நூற்றுப் பதினன்கு அறக்கட்டளைகளை ஏற்படுத்தி, இந்தியாவெங்கணும் அறமும் சைவமும் தமிழும் தழைக்குமாறு செய்து வருகிறது. எழுபத்தைந்து நூறாயிரத்திற்கு மேற்பட்ட தொகைகளை வைப்பு நிதியாக வைத்து என்ஞான்றும் அறச்செயல்கள் நிகழ்ந்துவரும்படி செய்துள்ளது. விளக்கம் வருமாறு :

| | | | | | |
|---|---|---|---|---|---|
| I | திருமுறைகள் பரவ | 34 | அறக்கட்டளைகள் | ரூ. | 10,07,200 |
| II | கல்விக்கு | 68 | ,, | ரூ. | 26,88,125 |
| III | சைவசித்தாந்தம் தழைக்க | 7 | ,, | ரூ. | 1,56,000 |
| IV | ஏழைகட்குணவிட | 125 | ,, | ரூ. | 22,39,800 |
| V | மருத்து உதவி | 6 | ,, | ரூ. | 4,23,500 |
| VI | பொது (குளிக்குமிடம் கட்டல், மின்னொளி விளக்கேற்றல், ஆகாத்தோம்பல், ஆப் பரிசுகள், கல்வெட்டுக்கள் முதலியன) | 74 | அறக்கட்டளைகள் | ரூ. | 10,47.390 |
| | மொத்தம் | 314 | அறக்கட்டளைகள் | ரூ. | 75,612,1015 |

இப்போது பட்டத்தில் எழுந்தருளியிருக்கும் திருப்பெருந்திரு அருள் நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் இத்திருமடத்தின் அறக்கட்டளைகள் யாவும் நன்கு நடைபெறும்படி செய்து சைவமும் தமிழும் அறமும் ஓங்கச் செயது வருகின்றார்கள். அவர்கள் பணி வாழ்வதாகுக.

வாழ்க திருப்பனந்தாள் மடம்!

வாழ்க சைவமும் தமிழும்!

வாழ்க அருணந்தித் தம்பிரான் மலரடிகள்!

# செய்திகளும் குறிப்புக்களும்

## க. இந்திதான் பொது மொழி !

"இந்நாடு முழுவதையும் ஒன்றாக இணைக்க ஒரு பொது மொழி உடனடித் தேவையாகும். எவ்வளவு விரைவில் பொதுமொழியினால் நாட்டை இணைக்கிறோமோ அவ்வளவுக்கு நல்லது. இந்நாட்டில் பெரும் பாலோரால் புரிந்துகொள்ளப்படுகிற மொழி இந்தி என்பதில் ஐயமில்லை" என்று வார்தாவில் 11—11—61இல் ஒரு பொறியியற் கல்லூரிக் கால்கோள் விழாவில் பேசிய இந்திய உள் துறை அமைசசர் லால்பகதூர் சாத்திரியார் பேசியிருக்கிறார். அமைச்சர் அத்துடன் நின்றார் இல்லை. "இந்தியை இந்நாட்டின் ஆட்சி மொழியாக்குவதால் ஆபத்து எதும் இல்லை" என்றும், "ஒரே எழுத்து முறை தேவை" என்றும், "அதுவும் தேவநாகரி எழுத்தாதலே நன்று" என்னும் கருத்துப்படவும் பேசியுள்ளார்.

குறிப்பு: இந்திய அரசு இந்தியைப் பரப்புவதிலும், தேவநாகரி எழுத்தைக் கொணாவதிலும் எத்துணை ஆர்வம் கொண்டுள்ளது என்பதற்கு இந்த உள்துறை அமைச்சரின் உள்ளந் திறந்த பேச்சுப் போதிய சான்றாகும். இந்தியால் விளையும் தீங்கு ஒரு புறமிருப்பினும் மைய ஆட்சியின் உள்ளத்தில் உள்ளதை உள்ளபடியே உரைத்த உள்துறை அமைச்சரைப் பாராட்டத்தான் வேண்டும்!

## உ. தேவநாகரி எழுத்துப் பற்றி அமைச்சர் கருத்து

"எந்த மொழியின் எழுத்தையம் வேறொரு பொது எழுத்தைக் கொண்டு மாற்றப்போவதில்லை என்று பல முறை தெளிவு படுத்தியிருக்கிறோம். தேவநாகரி எழுத்து இந்தியாவின் பொது எழுத்தாக வரவே வராது. ஒரு பொது எழுத்து இன்றியே நாடு இயங்க முடியும். என்னைப் பொறுத்த வரையில் அப்படி எதாவதொரு பொது எழுத்துத தேவையென்றால் அது ரோமன் எழுத்தாகத் தான் இருக்க வேண்டும" என்று தமிழகக் கல்வி, நிதி அமைசசர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் 13-11-61 இல் சட்ட மன்றத்தில் தெரிவித்தார்.

குறிப்பு: அமைச்சர் அவர்களின் கருத்துப் பாராட்டத்தக்கதே. ஆனால் எதையும் வேண்டுமென்றோ, வேண்டாமென்றோ கூறும் அதிகாரம் மைய அரசினரிடமன்றோ உளது!

## ங. "மறை மலையடிகள் சாகுந்தலம் கட்டுரைப் போட்டி"

காஞ்சி காமகோடிபீடத்தலைவா சங்கராசசாரிய அடிகள் "மறைமலையடிகள் சாகுந்தலம் தமிழ்க் கட்டுரைப் போட்டி"ப் பரிசு ஒன்றை ஏற்படுத்தியுள்ளனர். அப்பரிசுத் தொகை நூறு வெண்பொற் காசுகள். சென்னை, மீனம்பாக்கம், தாம்பரம் கலைக்கல்லூரிகளில் பி. ஏ., பி. எஸ். சி., எம். ஏ., ஆகிய வகுப்புக்களில் தமிழைத் தனிப்பாடமாக எடுத்துப் பயிலும் மாணவர்கள் இப்போட்டியில் கலந்து கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது. 'துஷ்யந்தனின் பண்புகள்' என்பது பரிசுக்குரிய கட்டுரையின் தலைப்பாகும். கட்டுரை வழங்குதற்கு 1962 ஆம் ஆண்டு சனவரி 8ஆம் தேதி முடியக் காலவரையறை கொடுகப்பட்டுள்ளது.

## ச. மறைமுகமாக இந்தியைத் திணிப்பதேன் ?

"நாட்டில் பிரிவினை உணர்ச்சி தோன்றுவதற்கு அரசாங்கமே காரணம். இந்தித் திணிப்பால் வங்காளத்திலும் தமிழகத்திலும் எதிர்ப்புணர்ச்சி வளர்ந்துவிட்டது. பள்ளி மாணவர்கள் ஏதேனுமொரு இந்திய மொழியைக் கற்கவேண்டுமென்று சொல்லி, அங்ஙனம கற்பிக்கப்படும் மொழி இந்தியாகவே இருக்கும்படியான நிலைமையை உண்டு பண்ணியிருக்கிறார்கள். இந்தியைத் தவிர வேறு இந்திய மொழி கற்பிக்க ஆசிரியர்கள் கிடைப்பதில்லை. இது மறைமுகமாக இந்தியை நுழைக்கும் முயற்சியாகும். வடநாட்டவர் தென்னிந்திய மொழியைக் கற்க விரும்புகிறார்களா ? இதை அரசியலார் உணரவேண்டும். மேலும், தேவநாகரி எழுத்தைப் புகுத்துவது பற்றியும் பேசுகிறார்கள். தமிழுக்கு முதன்மை தருவதாகக் கூறும் இவர்கள், தேவநாகரி எழுத்து வருமா வராதா என்பது பற்றித் திட்ட வட்டமாக அறிவித்துவிட வேண்டும்" என்று 13—11—61இல் சட்ட மன்றத்தில் பேசிய திரு. வி. கே. இராமசாமி முதலியார் குறிப்பிட்டார்.

**குறிப்பு :** இங்ஙனம் நடுநிலை நின்று மொழி பற்றியும் வடநாட்டு ஆதிக்கம் பற்றியும் பேசிய திரு. முதலியாரவர்களைப் பாராட்டுகிறோம்.

## ரு. ஆங்கிலத்தின் தேவை பற்றி திரு. ஹக்சிலி கருத்து

"உலக நாடுகள் அனைத்தும் தம் மொழியல்லாமல் இரண்டாவது மொழியாக வேறொன்றையும் கற்க வேண்டியதாயுள்ளன. உலகின் பெரும் பகுதிகளில் ஆங்கிலமே வழங்கப்படுகிறது. எனவே அதனையே இரண்டாவது மொழியாகக் கற்றல் நன்று," என்று கடந்த 19—11—61 இல் சென்னைக்கு வந்த, புகழ்பெற்ற ஆங்கில எழுத்தாளரான திரு. அல்டோஸ் ஹக்சிலி என்பார் கூறினார். மேலும் உலகிற்கு ஒரு பொது மொழி தேவையா? என்பதுபற்றிக் கேட்கப்பட்ட போது, அவர் 'சொல்லளவில் அது சரியேயெனினும் செயலளவில் அதில் பல இடர்ப்பாடுகள் உள. அதற்கென ஒரு மொழியைக் கண்டுபிடிப்பதைவிட இருக்கின்ற மொழிகளில் ஒன்றைப் பயன்படுத்துதலே அச் சிக்கலைத் தீர்க்க வழி. ஆங்கிலமே அதற்கு ஏற்றதாக எனக்குத் தோற்றுகிறது" என்றார்.

**குறிப்பு :** ஆங்கிலத்தின் தேவையைப் புறக்கணித்தும் இந்தி மொழியை ஏற்றிப் போற்றியும் வரும் இந்தியத் தேசீய வாதிகட்குத் திரு. ஹக்சிலி அவர்களின் பேச்சை எடுத்துக்காட்ட விழைகிறோம்.

## சுா. திருவாசகமணிக்குப் பொன்னாடைகள்

கடந்த 19—11—61இல் கரூரில் நடைபெற்ற, கரூர் தமிழ் எழுத்தாளர் சங்க ஆண்டு விழாவில் திருவாசகமணி திரு. கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்கட்குத் தவத்திரு குன்றக்குடி யடிகளார், அவரது புலமையைப் பாராட்டிப் பொன்னாடை போர்த்தி வாழ்த்தினார். மேலும் திருவாசகமணியவர்கள், இளையாத்தங்குடியில் தங்கியிருக்கும் தவத்திரு சங்கராச்சாரிய அடிகளைக் கண்டு சமயத்துறை பற்றி உரையாடினர். அக்காலைத் திருவாசகமணியவர்களால் திருக்குறள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்படும் செய்தி கேட்டுச் சங்கராச்சாரிய அடிகள் அகமகிழ்ந்து வாழ்த்துரை ஒன்றும் வழங்கினர். சந்திர மௌலீஸ்வரர் திருமுன் அடிகள் திருவாசகமணிக்குப் பொன்னாடையொன்று போர்த்திச் சிறப்புச் செய்தார்.

குறிப்பு : திருவாசகமணியவர்கட்கு நமது வாழ்த்தினையும் தெரிவித்துக்கொள்ளுவதோடு, அவர்கள் மேலும்தமிழுக்குத்தொண்டு செய்ய அருள் புரியுமாறு எல்லாம் வல்ல இறைவனை வழுத்துகிறோம்.

எ. வாலாஜாபாத் இந்து மத பாடசாலை :
சர். ஏ. இராமசாமி முதலியார் வருகை

காஞ்சிபுரம் இராவ்பகதூர் கெ. சாம்பசிவ செட்டியார் அவர்கள் வாலாஜாபாத் இந்துமத பாடசாலைக்கு 20 ஏக்கர் நிலமும், ஒரு கடையும் நன்கொடை யளித்ததை முன்னிட்டு அவர் தம் திருவுருவப் படம் 29—11—61 அன்று திறந்து வைக்கப்பெற்றது. உலகப் பேரறிஞர் திவான்பகதூர் டாக்டர் சர். ஏ. இராமசாமி முதலியார் அவர்கள் திறப்பு விழா ஆற்றினார்.

---

## மறைமலையடிகள் நூல் நிலையம்

சென்னை இலிங்கிச செட்டித்தெருவிலுள்ள மறைமலையடிகள் நூல் நிலையம் தொடங்கி மூன்று ஆண்டுகள் நிறை வெய்தி நான்காவது ஆண்டில் முதல் காற் பகுதியும் 21—11—61இல் முடிவடைகிறது. இந் நூல் நிலையத்தில் அறிவியல், மொழியியல், இலக்கியம், சமயம், தத்துவம், வரலாறு போன்ற பல துறைகளிலும் ஆங்கிலத்திலும் தமிழிலும் நூல்கள் உள்ளன. நூல்களை வீட்டிற்கு எடுத்துச் சென்று படிப்பதற்கென வழங்கும் பகுதியொன்றும் தனியாக நடத்தப் பெற்று வருகின்றது. நான்காவது ஆண்டின் முதல்காற்பகுதியில் இந்நூலகத்திற்கு வந்து இதைப் பயன்படுத்தியோரின் எண்ணிக்கை 5763. பயன்படுத்தப்பட்ட நூல்களின் தொகை: ஆங்கில நூற்கள் 1432. தமிழ் நூற்கள் 2275. இருநூறு நூல்கள் புதிதாகச் சேர்க்கப் பட்டுள்ளன.

வழங்கும் பகுதியில் உறுப்பினராவதற்கு ரூ. 10 முன் பணமும் ரூ. 1 நுழைவுக்கட்டணமும் செலுத்த வேண்டும். இப்பொ[illegible] பகுதியில் 80 உறுப்பினர்கள் உள்ளனர். இப்பகுதியில் இலக்கிய[illegible] வரலாறு, சமயம், புதினம் போன்ற பல துறைகளில் 1345 நூற்கள் உள்ளன. நான்காமாண்டின் முதற்பகுதியில் உறுப்பினர்கள் 853 நூற்களை வீட்டிற்கு எடுத்துச சென்று படித்துள்ளனர்.

—நூலகர்.

---

## வேண்டுகோள்

இத் திங்கள் முதற்கொண்டு 'செந்தமிழ்ச் செல்வி'யின் கையொப்ப உறுப்பினர்களின் முகவரிகளைத் தமிழிலேயே எழுத முடிவு செய்திருப்பதால், கொழும்பில் உள்ள செல்வியின் கையொப்ப உறுப்பினர்கள் தங்கள் முகவரிகளைத் தமிழிலேயே எழுதியனுப்புமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

மேலாளர்.

# மதிப்புரை

**'அருட்புகழ்'**

(1-10-54 முதல் 8-10-54 வரை பாடப் பெற்றவை) ஆசிரியர் **அருட்கவி-சேதுராமனார்.** விலை 75 காசு. கிடைக்குமிடம் 'சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,' அஞ்சற்பெட்டி எண் 85, சென்னை-1.

இந்நூல் 'நாகை - திரு P. M. சொக்கநாதம் செட்டியார் அவர்களால் அவரின் காலஞ்சென்ற 'தந்தையார் திரு. முத்துராமசாமி செட்டியாரவர்களின் நினைவு மலராக வெளியிடப் பட்ட' தாகும். இதன்கண் 'நாகை, திருச்செங்காட்டங்குடி, திருக்கண்ணபுரம், திருப்புகலூர், மஞ்சட் கொல்லை, சிக்கல், கீழ்வேளூர், எட்டிகுடி, திருவாய்மூர், திருவாரூர், சுவாமிமலை ஆகிய திருவூர்களில் அருட்கவி சேதுராமனாரவர்கள் திருவருளுந்துதலால் தம் வயமிழந்து திருவருள் வயப்பட்டுப் பாடியருளிய திருப்பாடல்கள் 256 காணப்படுகின்றன. அவைகள் பெரும்பாலும் திருப்புகழ்ச் சந்தப்பாக்களே. சிலபல கலிவிருத்தம் வெண்பா ஆசிரிய விருத்தம் முதலிய யாப்பினங்களும் பொருந்தியனவாகும். அடிப்படைத் திருப்பாட்டுக்களாக அவ்வத் திருவூர்களுக்குரிய திருப்புகழ், தேவாரம் முதலியனவுங் காணப்படுகின்றன.

இந்நூல் தெய்வநம்பிக்கையையும், வழிபாட்டு மேன்மையினையும், அருளாளர் திருப்பாடல்களை அச்சிட்டு வெளிப்படுத்தும் சிவபுண்ணியப் பேற்றினையும் எடுத்துக் காட்டுவதாகும். இதனைச் செந்நெறிச் செல்வர்களும், செந்தமிழன்பர்களும் வாங்கியும் வாங்குவித்தும் ஓதியும் ஓதுவித்தும் பெரும்பயன் எய்துவார்களாக.

**'ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் தோத்திர மஞ்சரி'**

தொகுத்து வெளியிடுவோர் திரு. S. V. சுப்பிரமணிய சகோதரர்கள். இதன்விலை 75. காசு. கிடைக்குமிடம் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், அஞ்சற் பெட்டி எண் 85, சென்னை 1.

'கந்தரநு பூதி பெற்றுக் கந்தரநு பூதிசொன்ன
எந்தைஅருள் நாடி இருக்குநாள் எந்நாளோ' —தாயு. அ.

என்று தாயுமானச் செல்வரால் சிறப்பித்துச் சொல்லப்பட்ட செந்நெறி முதல்வர் அருணகிரியார்தம் திருவடி பரவுவதற்குரிய புகழ்ப்பாக்கள் பலவகை யாப்பில் ஏறத்தாழ நூற்றுக்குமேல் காணப்படுகின்றன. பாடல்களனைத்தும் இனிமையும் எளிமையும் ஆற்றொழுக்கும் அமைந்தன. அடிகளார் திருவடி வழிபாட்டிற்குத் தனிச்சிறப்பமைந்தன. திருவரலாற்றுக் குறிப்புக்களும், திருவருட் செயல்களும் ஆங்காங்கு விளங்கித் திகழ்கின்றன. வழிபாட்டிற் சிறந்த மலர்தூவிப் போற்றுதலுக்குரிய போற்றி அகவல்களும் காணப்படுகின்றன. வரலாற்றுக் குறிப்புக்களறிதற்கும் வாயிலாக வுள்ளதிது. இந்நூல் அடியார் வழிபாட்டிற்கு தனிமிகச் சிறந்ததாகும். இதனை மெய்யன்பர்களனைவரும் பெற்று ஓதி யுணர்ந்து வழிபாடியற்றி யுய்வார்களாக.

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகத்திற்காக, சென்னை, 2-140, பிராட்வே,
அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.